# அரசியல் பஞ்சாயத்து

இது மக்களுக்கான களம்

அரசியல் • ஆன்மிகம் • கலை • விழிப்புணர்வு • மாதம் இரு இதழ்

மே 16-31, 2022 மலர்: 01 இதழ்: 02




## இந்தியை திணிக்காதீர்!



# தி.மு.க. அரசு ஆன்மீக அரசா... அஞ்சுகிற அரசா?

## அடுத்த பிரதமர் அமித்ஷா!



## ஓடினார், ஓடினார்... ராஜபக்சே ஓடினார்

## பாவத்தின் தண்டனை ஆரம்பம்

## வாரிசுகளுக்கு ‘நோ சீட்’..!



# தி.மு.க. அரசு ஆன்மீக அரசா... அஞ்சுகிற அரசா?




மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தருமபுரம் ஆதீனத்தைப் பல்லக்கில் தூக்கிச் செல்லும் பட்டினப் பிரவேசம் நடைபெறும். மனிதனை மனிதனே தூக்கிச் செல்வதா?... இது அடிமைத்தனத்தின் அடையாளம் என்று பட்டினப் பிரவேச நிகழ்ச்சிக்கு விடுதலை சிறுத்தைகள், திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து. தருமபுரம் ஆதீனத்தைப் பல்லக்கில் தூக்கிச் செல்வதற்குத் தடை விதித்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் பாலாஜி உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் மாநிலம் முழுவதும் பேசுபொருள் ஆனது. இதற்கு பல்வேறு தலைவர்களும் ஆதரவும் எதிர்ப்பும் தெரிவித்தனர். அரசியல் சர்ச்சை ஆனது.தமிழகத்தில் ஏதாவது ஒன்றைச் செய்து பரபரப்பை ஏற்படுத்த வேண்டும், அ.தி.மு.க.வை முந்திக்கொண்டு எதிர்ப்பை காட்ட வேண்டும் என்பதே பா.ஜ.வின் திட்டம். அதற்காகத்தான் திடீர் திடீரென போராட்டங்களை அறிவிக்கிறார்கள். கந்தசஷ்டி விவகாரத்தில் பாஜனதா சார்பில் வேல் யாத்திரை நடத்தப்பட்டது. அதே போல், இப்போது தருமபுரம் ஆதீனம் விவகாரத்தையும் பா.ஜ. கையில் எடுத்தது. பட்டினப் பிரவேசம் நடத்தியே தீருவோம் என்று பாஜனதா, இந்து முன்னணி போன்ற அமைப்புகள் உறுதிபடக்கூறின.

பட்டின பிரவேசம் நிகழ்ச்சி தொடர்பாக அனைத்து மனங்களும் குளிரும் வகையில் முதல்வர் ஸ்டாலின் விரைவில் நல்ல முடிவு எடுப்பார் என்று அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சட்டசபையில் கூறினார். முதல்வரை பல்வேறு ஆதீனங்கள் சந்தித்துப் பேசினர். இதன்பின்னர் பட்டினப் பிரவேச நிகழ்ச்சிக்கு தடை நீக்கப்பட்டது.

பட்டின பிரவேசத்திற்கு அனுமதி அளித்த தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு தருமபுர ஆதீனமே பாராட்டு தெரிவித்தார். அவர் கூறியதாவது:

கருணாநிதி ஆட்சிக் காலத்திலும் பட்டின பிரவேசம் நடைபெற்றது. தற்போது அவருடைய மகன் ஆட்சிக்காலத்தில் அது தடைப்படக்கூடாது என்று அஞ்சினேன்.

பல்லக்கு மனிதனை மனிதன் சுமப்பது அல்ல. குருநாதரை சீடர்கள் சுமப்பது. சபரிமலையில் டோலி சுமப்பது, கேதார்நாத், பத்ரிநாத்திலும் சுமக்கிறார்கள். இதனால் மனித உரிமை மீறல் ஏற்படுகிறது என சொல்வது அழகல்ல. சிவிகை, திருச்சின்னம், விசிறி, கை தீவிட்டி இவை அனைத்தும் ஆச்சாரிய மூர்த்திகளுக்கு உரியது.

மடத்துக்குள் சென்று குருமகா சந்நிதானத்தை பார்க்க முடியாதவர்களுக்காக குருமகா சந்நிதானமே வீதியுலாவாக செல்வார்.

தடங்கல் வந்தது நன்மைக்கு என்று கம்ப நாட்டார் சொல்வதுபோல் இந்த தடை பட்டின பிரவேச நிகழ்ச்சியை விளம்பரப்படுத்துவதாக அமைந்துவிட்டது. முதல்வர் ஸ்டாலின் ஆட்சி காலத்தில்தான் சிறு நெருடல் ஏற்பட்டது. அதையும், உடனடியாக அவர் நீக்கம் செய்து பாரம்பரிய விழா நடைபெற வேண்டும் என்று கோட்டாட்சியருக்கு உத்தரவிட்டு தடை நீக்கப்பட்டு உள்ளது.



பட்டின பிரவேச விவகாரத்தில் உடனடியாக தீர்வு கண்டதற்கு முதல்வருக்குப் பாராட்டு. தமிழக அரசு ஆன்மீக அரசு என்பதை மெய்ப்பித்து உள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள ஆன்மீக உள்ளங்கள், ஆதீன நண்பர்கள், குறிப்பாக ஆதீனகர்த்தர்களும் தங்கள் மகிழ்ச்சியையும் நன்றியையும் வாழ்த்துகளையும் முதல்வரிடம் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார். வருகிற 22ம் தேதி பட்டினப்பிரவேச நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறும்

ஆனால் பா.ஜ.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் எல்.முருகனோ, பா.ஜ.வைக் கண்டு முதல்வர் ஸ்டாலின் பயந்து விட்டார். அதனால் தான் பட்டினப்பிரவேசத்துக்கு தடை நீக்கப்பட்டது என்று கூறி உள்ளார். இது தொடர்பாக முருகன் அளித்த பேட்டி வருமாறு:

தருமபுரம் ஆதீனம் விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் மூக்கை நுழைக்க நினைத்தார். தடை என்ற அவரது முயற்சிக்கு இந்து இயக்கம் மற்றும் பாஜ பயத்தை கொடுத்து விட்டனர். ஏற்கனவே கந்தசஷ்டி விவகாரத்தில் பாஜ யாத்திரை நடத்தியது போல் தற்போது இதற்கு ஏதாவது பெரிய யாத்திரை நடத்துவார்கள் என்ற அச்சத்தில் முதலமைச்சர் பயந்து பின்வாங்கி விட்டார். இந்த ஆண்டு மட்டும்தான் தடையை நீக்கி இருக்கிறோம் என்று அமைச்சர் கூறியுள்ளார். வேண்டும் என்றால் அடுத்த வருடம் தடுத்து பார்க்கட்டுமே.

இவ்வாறு முருகன் கூறினார்.

பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படாமலும் முதல்வர் ஸ்டாலின் முடிவு எடுத்த போதிலும், பா.ஜ.வை கண்டு பயந்தே முதல்வர் பின்வாங்கி விட்டார் என்று மத்திய அமைச்சர் கூறியிருப்பதும் அடுத்த ஆண்டும் இதை தடுத்து பார்க்கட்டுமே என்று அவர் சவால் விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மா.கம்யூனிஸ்ட் எம்.பி. வெங்கடேசன் கூறுகையில், மடத்திற்கென பல சடங்குகள், சம்பிரதாயங்கள் இருக்கலாம். ஆனால், மடத்தின் சம்பிரதாயங்களை விட மேலானது அரசியல் சாசன சட்டம். அதற்கு தங்களை மடாதிபதிகள் உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.


அரசியல் பஞ்சாயத்து
அரசியல் • ஆன்மிகம் • கலை • விழிப்புணர்வு • மாதம் இரு இதழ்

**மே 16-31, 2022 மலர்: 01 இதழ்: 02**

T. ராஜேஷ்குமார் - **ஆசிரியர்**

**தலைமை நிருபர்கள் :**
சதிஷ்குமார்.க, மகேஸ்வரன்.ப, குமரேசன், மணிகண்டன்

**சட்ட ஆலோசகர் :**
M.ராசிக் கான் B.A. B.L., D.பாஸ்கர் M.COM., B.L

**மாவட்ட நிருபர்கள் :**
பாரதி, சந்தோஷ்குமார், நிகில்

**நிருபர்கள் :** இளங்கோவன்.பி, கண்ணன்.து, வெங்கடேஷன்.க, சதிஷ்குமார், பிரியா, , கணேஷ், சுரேஷ்

**புகைப்படக்காரர்:** ராஜ்குமார்

**Website: www.arasiyalpanchayat.com**



**Office Address:** 45 -A SRI KRISHNA TOWERS
2ND FLOOR, DR NANJAPPA ROAD, GANDHIPURAM,
COIMBATORE-641012. **Phone: 95852 66556**
**Email:** arasiyalpanchayat@gmail.com



Press abd Registration of Books Act-**ன்படி செய்திகளின் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாளர். எல்லா வழக்குகளும் சென்னைநீதிமன்ற வரம்புக்கு உட்பட்டவை.**

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு அரசியல் பஞ்சாயத்து நிர்வாகம் பொறுப்பல்ல, பேட்டிகள் மற்றும். சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே!

# தமிழக புதிய எம்.பி.க்கள்

# 6 பேர் யார்.. யார்..!



## சிதம்பரத்துக்கு ‘சீட்’ மீண்டும் கிடைக்குமா?

மாநிலங்களவையில் மூன்றில் ஒரு பங்கு எம்.பி.க்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை முடிவடைந்து புதியவர்கள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். அந்த வரிசையில் 71 பேரின் பதவிக்காலம் அடுத்த இரு மாதங்களில் நிறைவுபெறுகிறது. எனவே புதிதாக 57 எம்.பி.க்களை தேர்ந்து எடுக்க வருகிற ஜூன் 10ம் தேதி தேர்தல் நடக்கிறது.

மத்திய அமைச்சர்கள் பியூஷ்கோயல் நிர்மலா சீதாராமன், நக்வி உள்பட பலர் பதவிக்காலம் முடிவடைகிறது. மத்திய அரசில் நிதி மற்றும் உள்துறை அமைச்சராக இருந்தவர் ப.சிதம்பரம். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் தற்போது ராஜ்யசபாவில் உறுப்பினராக உள்ளார். மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து எம்.பி. ஆனவர். இவரது பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது. தமிழ்நாட்டில் தி.மு.க.வின் ஆர்.எஸ்.பாரதி, டிகேஎஸ் இளங்கோவன்,. ராஜேஷ்குமார் மற்றும் அ.தி.மு.க.வின் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், வக்கீல் நவநீதகிருஷ்ணன், ஏ.விஜயகுமார் ஆகிய 6பேர் பணிக்காலம் நிறைவு பெறுகிறது. புதிய எம்.பி.க்களுக்கான தேர்தலுக்கு வருகிற 24ம் தேதி மனுதாக்கல் துவங்குகிறது.

தமிழ்நாட்டில் 6 எம்.பி.க்களில் 4பேர் தி.மு.க. கூட்டணி சார்பில் வெற்றி பெற வாய்ப்பு உள்ளது. இந்த 4 இடங்களில் ஒரு இடத்தை காங்கிரஸ் கேட்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆளுக்கொரு சீட் கேட்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப் பட்டு விட்டது. காங்கிரசின் தற்போதைய தலைவர் கே.எஸ்.அழகிரி தனக்காக சீட் கேட்கிறார். காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் தமிழ்நாட்டில் இருந்து தேர்வு

பெறுவதற்காக தி.மு.க.விடம் சீட் கேட்கிறார். அவருக்கு கொடுக்க தி.மு.க.வில் கடும் எதிர்ப்பு கிளம்பிஉள்ளது. சிதம்பரத்தின் மகன் கார்த்தி தேவையில்லாமல் தி.மு.க.வை சீண்டி வருகிறார். எனவே சிதம்பரத்துக்கு வாய்ப்பு தரக்கூடாது.நமது கட்சியில் ஆளே இல்லையா என்று கேட்கிறார்கள். சிதம்பரத்தின் கோரிக்கை குறித்து தி.மு.க. இன்னமும் பதில் அளிக்கவில்லை.

தி.மு.க.விலும் கடும் போட்டி நிலவுகிறது. தற்போது ஓய்வு பெறும் ராஜேஷ்குமாருக்கு சீட் உறுதியாகி விட்டது. அவர் குறுகிய காலமே எம்.பி. ஆக இருந்ததால் அவர் மீண்டும் எம்.பி. ஆகிறார். ஆனால் ஆர்.எஸ்.பாரதி மற்றும் இளங்கோவனுக்கு சீட் உறுதி செய்யப்படவில்லை. இளங்கோவன் நன்றாக பேசக்கூடியவர் என்ற போதிலும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் அதிகம் உள்ளன. கட்சியின் நிலைப்பாடு பற்றி தானாகவே அவர் பேசுவதை தலைமை விரும்பவில்லை. எனவே ராஜேஷ்குமார் தவிர மற்ற இருவருக்கும் சீட் தரப்படவில்லை. தி.மு.க.வுக்கு வாய்ப்பு உள்ள4 இடங்களில் ஒன்றை காங்கிரசுக்கு விட்டுத்தர தீர்மானிக்கப்பட்டது. மற்ற 3 இடங்களில் ராஜேஷ்குமார், தஞ்சை கல்யாணசுந்தரம், வக்கீல் கிரிராஜன் ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று தி.மு.க. தலைமை அறிவித்தது.

அ.தி.மு.க. தரப்பில் 2 பேர் எம்.பி. யாக முடியும். அதற்கு கடும் போட்டி நிலவுகிறது. 50க்கும் மேற்பட்டவர்கள் முட்டி மோதுகிறார்கள். இதில் ஓ.பி.எஸ். தரப்பில் ஒருவரும், இ.பி.எஸ். ஆதரவாளர் ஒருவரும் எம்.பி. ஆகிறார்கள்.

பா.ஜ. தரப்பில் இருந்து இருவரை எம்.பி. ஆக்க முடிவு செய்துள்ளனர். இதில் ஒருவர்சினிமா,இசைத்துறை,அல்லது பத்திரிகையாளர் என்கிறார்கள். மாற்றுக்கட்சியில் இருந்து வந்த ஒருவரும் எம்.பி. ஆக்கப்படலாம் என்று கமலாலய வட்டாரங்கள் கூறுகின்றன. காங்கிரசைச் சேர்ந்த ப.சிதம்பரத்தை மீண்டும் மகாராஷ்டிராவில் இருந்து எம்.பி. ஆக்க காங். தலைமை முடிவு செய்துள்ளதாக சத்தியமூர்த்தி பவன் வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஒரு பண்ணையார் மந்திரி ஆகிறார்..!

தமிழகத்தில் பா.ஜ.கூட்டணி ஆட்சி தான் என்று மல்லுகட்டி போராடினாலும் கிடைத்தது என்னவோ வெறும் 4 சீட் தான். மாநில பா.ஜ. தலைவரே தோற்றுப் போனார். வென்ற 4 இடங்களிலும் தி.மு.க.வின் உள்குத்து வேலைகளால் தான் தோற்க நேர்ந்தது. நெல்லை, நாகர்கோவில்,மொடக்குறிச்சியில் நின்ற தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றால் மந்திரி ஆகி விடுவார்களே என்ற உள்குத்தால் எதிர்கோஷ்டியினர் செய்த கீழறுப்பு வேலை தான் இது. கோவையில் மட்டுமே அ.தி.மு.க. பலத்தால் வானதி வெற்றி பெற்றார். இப்போது 4 பேர் இருந்தாலும், தமிழக பா.ஜ.வில் மனக்கசப்பு அதிகமாகவே உள்ளது. இ தை தி.மு.க. சாதகமாக்கிக்கொள்ளப் பார்க்கிறது. 2 எம்.எல்.ஏ.க்களை தங்கள் பக்கம் இழுக்க முடிவு செய்து விட்டது. இதற்கான பேரமும் துவங்கி விட்டது. இதனால் தாமரை ஆளுக்கு பாதியாகப் போகிறது.

ஏற்கனவே மாற்றுக்கட்சிகளில் இருந்து வந்தவர்கள் தான் தற்போது மந்திரிகளாக உள்ளனர். அதே பாணியில் பா.ஜ.வையும் உடைத்து ஒருவரை மந்திரி ஆக்க முடிவு செய்துள்ளது. அந்த ஒருவர் தென்மாவட்டத்துக்காரர். தற்போது பண்ணையாராக வலம் வரும் அவர் தி.மு.க.வுக்கு வந்தால் அசைக்க முடியாத சக்தியாக விளங்கும். தென்மாவட்டத்தில் பெரும்பான்மையாக உள்ள ஒரு சமுதாயத்தை தங்கள் பக்கம் கொண்டு வந்து விடலாம் என்றும் தி.மு.க.தலைமை கணக்கு போடுகிறது. அதே சமயத்தில் தி.மு.க.வில் சீட் கிடைக்காமல் விலகிய கல்வியாளர் ஒருவரையும் மீண்டும் சேர்க்க முயற்சிகள் நடக்கின்றன. இதனால் அந்த சமுதாயத்தை ஓட்டு மொத்தமாக தி.மு.க. பக்கம் திருப்பி விடலாம் என்பதே தி.மு.க.வின் திட்டம். அடுத்த மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக இதை செயல்படுத்தப் போகிறார்கள். இதனால் பா.ஜ.வின் கோபத்துக்கு ஆளாக வேண்டுமே என்றாலும் அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்கிறது தலைமை. நம் கட்சியில் கை வைத்து ஆட்களை இழுக்கிற போது அவர்கள் மீது நாமும் கைவைத்துப் பார்க்கலாமே என்று விளக்கம் சொல்கிறார்கள். அதே சமயத்தில் பா.ஜ.வில் சேர்ந்த சிலரும், நமக்கு அழைப்பு வருமா என்று காத்திருக்கிறார்கள்.

# தி.மு.க.வில் அ.தி.மு.க. நாட்டாமை!

தி.மு.க.வில் தற்போது உட்கட்சி தேர்தல் நடந்து வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சி பல கோஷ்டிகளாக பிரிந்து கிடக்கிறது ஒரே மாவட்டத்தில் இரு கோஷ்டிகள் இருந்த நிலை மாறி,ஒரே மாவட்டம் வடக்கு,தெற்கு,கிழக்கு, மேற்கு என பிரிக்கப்பட்டதால் ஊருக்கு இரு கோஷ்டிகளாக மாறி விட்டன. அ.தி.மு.க.வில் இருந்து வந்தவர்களுக்குபதவி தரவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு மா. செயலாளர் பதவி தரப்பட்டது. இதன் விளைவு தான், பரம்பரை தி.மு.க.வினரை கருவறுக்கும்வேலையில் வந்தேறி மா.செ. இறங்கி விட்டார். தன்னுடன் வந்தவர்களையே கட்சித் தேர்தலில் நிறுத்துகிறார். தேர்தலில் நிற்பதற்கு தி.மு.க.வில் உள்ள தகுதிகள் எல்லாம் மீறப்படுகின்றன.இதனால் பல மாவட்டங்களில் மோதல் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தநிலையில் தான் தென் மாவட்ட தி.மு.க. ஒன்றில் மா.செயலாளராகவும் அமைச்சராகவும் இரட்டைப் பதவி வகிக்கிற ஒருவர் ஆடுகிற ஆட்டத்துக்கு அளவே இல்லை. அவருக்கும், அதே மாவட்டத்தில் அ.தி.மு.க. செயலாளராக இருக்கும் முன்னாள் அமைச்சர் ஒருவருக்கும் லிங்க் உண்டு. யார் ஆட்சியில் இருந்தாலும் பரஸ்பரம் உதவிக்கொள்வார்கள். இருவரும் அ.தி.மு.க.வில் இருந்த போது துவங்கிய நட்பு இன்றும் தொடர்கிறது. இவர்கள் இடையே தூது போய் வருகிறவர் ஒரு சமுத்திரம். இவர் அ.தி.மு.க.வின் மாவட்ட அவைத்தலைவர். இவர் தான் தற்போதைய தி.மு.க. அமைச்சரை வீடு தேடிச் சென்று சந்திக்கிறார். இவர் சென்றால் குறைந்தது ஒரு மணி நேரம் பேசிக் கொள்வார்களாம். மற்ற கட்சியினர் என்றால்5 நிமிடம் கூட பார்க்க விட மாட்டார்கள்.

இப்போது தி.மு.க.வில் யார் பதவிக்கு வரவேண்டும் என்பதில் அ.தி.மு.க.வினரின் பங்கு முக்கியமாகி விட்டது. பேரூர்கழகம் சிலவற்றில் பரம்பரை தி.மு.க.வினர் தொடர்ந்து பொறுப்பில் நீடிக்க வேண்டும் என்பதற்காக விண்ணப்பித்துள்ளனர். ஆனால் அவர்களை வரவிடாமல் தடுப்பதற்காக போட்டிக்காக சிலரை அமைச்சரும் மா.செயலாளருமானவர் களம் இறக்கி உள்ளார். அவர்களுக்கு போதிய தகுதி இல்லாத சூழலிலும் அவர்களின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. சில பேரூர்களை சர்ச்சைக்குரியவை என்று தலைமைக்கு கொண்டு சென்று அங்கு வைத்துப் பேசி வாபஸ் பெற வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் தான் பேரூர் கழகம் ஒன்றில் இன்னார் தான் வரவேண்டும் என்ற முயற்சியில் அ.தி.மு.க. நாட்டாமை செய்கிறது. எனது தொகுதியில் நீங்கள் பதவிக்கு வரவேண்டும் என்றால், உடனடியாக சமுத்திரத்தைப் போய்ப் பாருங்கள். அவர் அமைச்சரிடம் பேசி சரிக்கட்டி விடுவார் என்று மாஜி அமைச்சர் தூது அனுப்புகிறார். பதவிக்காக அ.தி.மு.க.காரன் காலில் போய் விழுவதா... தி.மு.க.வில் நாட்டாமை செய்ய உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது என்று பரம்பரை தி.மு.க.வினர் மல்லு கட்டுகிறார்கள். இது தொடர்பாக தலைமைக்கு புகார்கள் அனுப்பியும்

எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது ஒரு உதாரணம் தான். அந்த மாவட்டத்தில் இரு அமைச்சர்கள் இருந்தாலும் இவர் நடத்துகிற ராஜ்யமே தனி தான்.நடப்பது தி.மு.க. ஆட்சி என்றாலும், காரியம் சாதிப்பது அ.தி.மு.க.வினராகத் தான் இருக்கிறார்கள். எல்லா காண்டிராக்டும் அவர்களுக்கே போய்ச் சேருகிறது என்று தி.மு.க. தரப்பு குற்றம் சாட்டுகிறது. கட்சியை நாசம் செய்து வரும் இவரை தூக்கினால் தான் தி.மு.க. உருப்படும் என்பதே பரம்பரை தி.மு.க.வினரின் வாதமாக உள்ளது. தலைமை நடவடிக்கை எடுக்குமா?

# கனிமொழிக்கு எதிராக சசிகலா புஷ்பா!

தூத்துக்குடி எம்.பி. தொகுதியில் மீண்டும் களம் இறக்கத் துவங்கி விட்டார் கனிமொழி. ஏற்கனவே வாரம்4 நாள் தொகுதியில் முகாமிட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். கனிமொழி மாநில அரசியலுக்கு வேண்டாம்.. டெல்லி அரசியலுக்குத்தான் என்று களம் நிர்ணயித்து அவரை அங்கே அனுப்பி வைக்கிறது தலைமை. அவரை தென் மாவட்டங்களின் மண்டல பொறுப்பாளராக நியமிக்கவும் கட்சித் தலைமை ஆராய்ந்து வருகிறது. கட்சியில் கனிமொழியின் செல்வாக்கு உயர்ந்து கொண்டே போவது போல மக்களிடத்திலும் அவருக்கு மதிப்பு உயர்ந்து காணப்படுகிறது.

இப்போது தொகுதி பக்கம்அடிக்கடி வரத் து வங்கி விட்டார். எந்த ஒரு கட்சிக்காரர் வீட்டு நிகழ்ச்சி என்றாலும் தவறாமல் ஆஜராகி வருகிறார். ஏழை எளியோருக்கு உதவிகளை வழங்குகிறார். இன்னும் 2 ஆண்டுகளில் 2024ல் மக்களவைத் தேர்தல் வர இருக்கிறது. தூத்துக்குடி தொகுதிக்கு கனிமொழி தான் எம்.பி. வேட்பாளர் என்பதும் உறுதியாகி விட்டது. அதனால் தான் தொகுதியை தக்க வைத்துக்கொள்ள பம்பரம் என சுழன்று வருகிறார் கனிமொழி. கடந்த முறை தூத்துக்குடி தொகுதி பா.ஜ.வுக்கு போனது. தமிழிசை சவுந்தரராஜன் நிறுத்தப்பட்டார். ஆனால் கனிமொழியே வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்குகள் 5,63,143. அவரை எதிர்த்து நின்ற தமிழிசை பெற்ற ஓட்டுகள் 2,15,934. கனிமொழி வாங்கியதில் கால் பங்கு ஓட்டுகளே பா.ஜ.- அ.தி.மு.க. கூட்டணி பெற முடிந்தது.

இனி வரும் தேர்தலிலும் தூத்துக்குடி தொகுதிக்கு பா.ஜ. குறி வைக்கிறது. இந்த முறை தமிழிசை வேட்பாளர் அல்ல. மாறாக அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டு பா.ஜ.வில் சேர்ந்த முன்னாள் எம்.பி. சசிகலா புஷ்பா தான் வேட்பாளராக அறிவிக்கப்பட உள்ளார். இவர் ஏற்கனவே தூத்துக்குடி மாநகராட்சி மேயராக இருந்தவர். இப்போது பா.ஜ.வின் மாநில துணைத்தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். கனிமொழியை நாங்களே தோற்கடிப்போம் என்று வீர சபதம் எடுத்து களம் இறங்குகிறது பா.ஜ.



இவர் மீது இரண்டாம் திருமணம், தி.மு.க. எம்.பி.யை தாக்கியது போன்ற பல சர்ச்சைகள் இருந்தாலும், தேர்தல் களத்தில் அவற்றை எல்லாம் மக்கள் மறந்து விடுவார்கள் என்று விளக்கம் தருகிறது பா.ஜ.



# காணாமல் போகும் உறவுகள்!

## குறைந்து வரும் குழந்தை பிறப்பு

இந்தியா என்றாலே வேற்றுமையில் ஒற்றுமை காண்கிற நாடு. பல தரப்பட்ட மக்கள் வாழ்கிற இந்த பூமியில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த காலம் போய் அடுக்குமாடி குடியிருப்புகளில் பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார் என்று தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பணம் சம்பாதிக்கும் ஆசையில் குழந்தை பெற்றுக்கொள்வதை ஒன்றோடு நிறுத்திக்கொண்டு அல்லது நமக்கு ஏன் ஒருவர்... என்று கலாச்சாரத்துடன் வாழ்கிற போக்கு நிலவுகிறது. ஒற்றைக் குழந்தையுடன் நிறுத்திக்கொள்ளும் போக்கினால் உறவு முறைகளே காணாமல் போய் விடும் சூழலுக்கு தள்ளப்பட்டு உள்ளோம்.

அண்ணன்-தங்கை, அண்ணன்-தம்பி, அக்காள்-தம்பி, அக்காள் -தங்கை... இப்படி வாழ்ந்தவர்கள் ஒற்றைப் பிள்ளை முடிவால் உடன்பிறப்புகள் இல்லாமலேயே ஒற்றைப்படையாய் நிற்கவேண்டிய நிலை. இதன் விளைவாக மாமன்- அத்தை, சித்தப்பா-பெரியப்பா, பெரியம்மா-சித்தி, அத்தான்-மதினி, மைத்துனர்-மைத்துனி என்ற உறவுமுறையே இல்லாமல் போய் விடும். சமீபத்திய தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் அறிக்கையின்படி இந்தியா முழுவதுமே ஒற்றை குழந்தையுடன் போதும் என்ற மனநிலை காணப்படுவது தெரிய வந்துள்ளது. மொத்த கருவுறுதல் விகிதம் அதாவது ஃபெர்டிலிட்டி ரேட் கடந்த . சில ஆண்டுகளில்

> “கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த காலம் போய் அடுக்குமாடி குடியிருப்புகளில் பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார் என்று தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்”

சரிந்துள்ளது. எல்லா மதங்கள் மற்றும் இனக்குழுக்களிலும் மொத்த கருவுறுதல் விகிதம் குறைந்துள்ளது என்று தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## இந்தியாவில் ஒரு அதிர்ச்சி ரிப்போர்ட்

கடந்த 2015-2016ம் ஆண்டில் கருவுறுதல் விகிதம் 2.2 ஆக இருந்த நிலையில், 2019-2021ல் எடுத்த ஆய்வில் இது 2.0 ஆகக் குறைந்துள்ளது. மொத்த கருவுறுதல் விகிதம் குறைவதால், ஒரு தம்பதிக்கு சராசரியாக இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன. இதனால், குடும்பங்களின் அளவுகள் சிறியதாகிவிட்டன. இருப்பினும் குடும்பத்தை சிறியதாக வைத்திருப்பதற்கு அவர்களின் சொந்த சமூக மற்றும் பொருளாதார காரணங்களும் உள்ளன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்குக் குறைவான குழந்தைகளே பிறக்கின்றன என்பதை புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

### காரணம் என்ன?

கூட்டுக் குடும்ப அமைப்பு முடிவுக்கு வரும் நிலையில், நிதி நெருக்கடியை சமாளிக்க தம்பதியர் இருவருமே வேலை செய்ய வேண்டிய நிலை. இதனால் குழந்தை பராமரிப்பில் சிரமங்கள் இருப்பதால் சிறிய குடும்பம் என்ற வட்டத்துக்குள் வாழத் துவங்கி விட்டனர். இதுவே முக்கிய காரணம். ஆனால், ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆசையில் இரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக்கொள்ளாத ஒரு பிரிவினரும் சமூகத்தில் உள்ளனர்.

மக்கள் தொகை சரிவு குறித்து சர்வதேச மக்கள்தொகை அறிவியல் நிறுவனத்தின் பேராசிரியரும், இந்த அறிக்கையின் ஆசிரியர்களில் ஒருவருமான எஸ்.கே.சிங், கூறியதாவது:

பெண்களின் திருமண வயது அதிகரித்துள்ளது. அவர்கள் பள்ளிக்குச் செல்லும் ஆண்டுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கருத்தடை சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. கூடவே, "குழந்தை இறப்பு விகிதமும் குறைந்துள்ளது. அதே நேரம், வறுமை அதிகமாகவும், கல்வி நிலை மோசமாகவும் இருக்கும் மதங்கள் அல்லது சமூகக் குழுக்களில், மொத்த கருவுறுதல் விகிதம் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நகரங்களில் கருவுறுதல் விகிதம் 1.6 ஆக உள்ளது. அதே நேரம் கிராமப்புறங்களில் அது 2.1 ஆக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் மத்தியில் கருவுறுதல் விகிதம் வெகுவாக குறைந்துள்ளது.

இவ்வாறு சிங் கூறினார்.

1950 களில் இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் 6 ஆக இருந்தது. எனவே, தற்போதைய எண்ணிக்கை ஒரு சாதனை என்று இந்தியாவின் மக்கள்தொகை அறக்கட்டளையின் நிர்வாக இயக்குனர் பூனம் முட்ரேஜா கூறுகிறார். அதே சமயத்தில் கருவுறுதல் விகிதத்தை ஒரு குறிப்பிட்ட மதத்துடன் இணைக்கக்கூடாது. இந்தியாவின் அதிக மக்கள்தொகை கொண்ட உத்தர பிரதேச மாநிலத்தில், இந்து குடும்பங்களில் கருவுறுதல் விகிதம் 2.29 ஆக உள்ளது. தமிழ்நாட்டில் முஸ்லிம் பெண்களிடையே இது 1.93 ஆக உள்ளது. எனவே, இதை மதத்துடன் தொடர்புபடுத்தாமல், கல்வி மற்றும் பொருளாதார காரணங்களுடன் தொடர்புபடுத்த வேண்டும். ஏனெனில், பெண்கள் கல்வியறிவு பெற்றுள்ள இடங்களில், குழந்தை பிறப்பின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது," என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் 2016 ம் ஆண்டு 'மிஷன் பரிவார் விகாஸ்' திட்டத்தை தொடங்கியது. உத்தர பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், ஜார்கண்ட் மற்றும் அசாம் ஆகிய ஏழு மாநிலங்களில் கருவுறுதல் விகிதம் அதிகமாக உள்ள 145 மாவட்டங்களில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. 2025ம் ஆண்டுக்குள் கருவுறுதல்

விகிதத்தை 2.1க்கும் கீழே கொண்டுவருவதே இந்தத்திட்டத்தின் குறிக்கோளாகும். இந்த எண்ணிக்கையை எட்டினால், அடுத்த மூன்று முதல் நான்கு தசாப்தங்களில் நாட்டின் மக்கள்தொகை ஒரே சீராகும் என்கிறார்கள். அதே சமயத்தில் இப்போது இந்தியாவின் மக்கள்தொகையில் சுமார் 65 சதவிகிதம் பேர் இளைஞர்கள். இது நாட்டுக்கும் பயனளிக்கிறது. ஆனால், வருங்காலத்தில் இந்த இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து, முதியோர்களின் தொகை அதிகரிக்கும். அதனால் சமூக சமநிலையும் பாதிக்கப்படும்.

### கருத்தடை

ஆண்கள் மற்றும் பெண்கள் கருத்தடையை எடுத்துக்கொண்டால் இதில் ஒரு பெரிய இடைவெளி உள்ளது. 1549 வயதுடைய பெண்களிடையே கருத்தடை விகிதம் 37.9 சதவிகிதமாக உள்ள நிலையில், ஆண்களின் கருத்தடை விகிதம் மிகவும் குறைவாக அதாவது 0.3 சதவிகிதமாக உள்ளது. ஆனால், ஆண்களிடையே ஆணுறை பயன்பாடு 9.5% ஆக அதிகரித்துள்ளது.

அதே சமயம், 35 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களில் 27% பேர் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை விரும்புவதாகவும், 7 சதவிகிதம் பேர் மட்டுமே இரண்டு குழந்தைகளுக்கு மேல் வேண்டும் என்று விரும்புவதாகவும் அதே கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் கருத்தடையின் சுமை பெண்கள் மீது அதிகம். எனவே, அவர்களின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது. தற்போது கருவுறுதல் விகிதம் குறைந்திருந்தாலும், மக்கள்தொகை சீரடைய சுமார் 40 ஆண்டுகள் ஆகும். அதாவது, 2060ஆம் ஆண்டுக்குள் இது நிகழும். இந்தியா தற்போது அதன் இளம் மக்கள்தொகை மூலம் பயனடைகிறது. அதன் பிறகு இந்த வளர்ச்சி விகிதம் ஒவ்வொரு வயதிலும் நிலையானதாக இருக்கும். மேலும், சமநிலையும் பராமரிக்கப்படும். எனவே, ஆசியாவின் பிற நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிடுவது தவறு என்று பேராசிரியர் சிங் குறிப்பிட்டார்.

# தமிழக காங்கிரசுக்கு தலைவி..?

தமிழகத்தில் அ.தி.மு.க. வை 30 ஆண்டுகளுக்கும் மேலாக வழி நடத்தி வந்தவர் ஜெயலலிதா. அவர் மறைவுக்கு பின்னர் இரட்டைத் தலைமையின் கீழ் வந்து விட்டது. ஆள் ஆளுக்கு ஒரு அறிக்கை... என்று யுத்தம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் பா.ஜ.விலும் ஒரு பெண் தலைமை ஏற்றார். அவர் தேர்தலில் தோற்று கவர்னர் ஆனதும் மீண்டும் ஆணாதிக்கம் ஆகி விட்டது. தி.மு.க.வில் பெண் தலைமை ஏற்க வழியே இல்லை. இந்த நிலையில் தேசிய கட்சியான காங்கிரசில் ஒரு பெண் தலைமை ஏற்கப் போகிறாராம். காங்கிரஸ் கட்சிக்கு இப்போது தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலில் அடுத்த மாநிலத் தலைவர் ஒரு பெண்ணாக இருக்கலாம் என்று மாநில காங்கிரசின் தற்போதைய தலைவர் கே.எஸ். அழகிரி கூறி உள்ளார். தற்போது தமிழக காங்கிரசின் இளம் எம்.பி.க்களில் ஒருவரான ஜோதிமணி பெயர் தெரிந்த அளவுக்கு இருக்கிறார். அவருக்குத் தான் தலைவர் பதவி காத்திருக்கிறதோ?

# 2 முதல்வரா?

ஆந்திராவில் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்காக கூட்டணி அமைக்கின்றன. அது கொள்கை கூட்டணி அல்ல. தெளிவான நோக்கம் கிடையாது. தெ.தேசம் தலைவர் சந்திரபாபுநாயுடு நானே முதல்வர் என்கிறார். ஜனசேனா தலைவர் பவன் கல்யாணும் அடுத்த முதல்வர் என்கிறார். அப்படியானால் ஆந்திராவுக்கு2 முதல்வரா? பவனுக்காக முதல்வர் பதவியை நாயுடு விட்டுத் தருவாரா?

ராமகிருஷ்ணரெட்டி,
ஒய்எஸ்ஆர் காங்கிரஸ்

# வாரிசுகளுக்கு 'நோ சீட்'




## காங்கிரசின் அதிரடி முடிவு

இந்திய தேசிய காங்கிரஸ் நாடாண்ட கட்சியாக ஒரு காலத்தில் இருந்தது. இப்போது ஒரு நகரசபையையே ஆள முடியவில்லை. தனித்து நின்றால் ஒரு கவுன்சிலர் வெல்வது கூட சந்தேகம். எனவே தான் திராவிட கட்சியின் தோளில் ஏறி அமர்ந்து கொண்டு தமிழகத்தில் தேர்தலை சந்திக்கிறது. பல்வேறு மாநிலங்களில் காங்கிரஸ், குறிப்பாக பெரிய மாநிலமான உ.பி.யில் ஒற்றை இலக்கத்துக்கு போய் விட்டது. இந்த நிலையில் காங்கிரசை மீட்டெடுத்து 2024 பொதுத் தேர்தலை சந்திக்க வைப்பதற்காக கட்சியின் சிந்தனை அமர்வு மாநாடு ராஜஸ்தானில் நடந்தது. காங்கிரஸ் தலைவர் சோனியா, ராகுல் எம்.பி. உள்பட மூத்த தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். பா.ஜ.வை எதிர்கொள்வது எப்படி என்பதே இதன் மைய கருத்தாக அமைந்தது.இதில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

காங்கிரசில் வெற்றி பெறுபவர்களுக்கு சீட் தருவதற்குப் பதிலாக வாரிசுகளுக்கே சீட் கேட்கிறார்கள். மூத்த தலைவர்கள் வழி விடாமல் நிற்பதால் தான் இளைஞர்கள் பிற கட்சிகளுக்குச் செல்வதாக குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து அதிரடி முடிவுகளை இந்த மாநாட்டில் எடுத்துள்ளனர். இதன்படி தலைவர்களின் பிள்ளைகள் கட்சிப் பணி ஆற்றாமல், தேர்தல் நேரத்தில் மட்டும் தலைகாட்டுபவராக இருந்தால் அவர்களுக்கு சீட் தருவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஐந்தாண்டுகள் தொடர்ந்து கட்சிப்பணி ஆற்றினால் தான் சீட்.

அதே போல ஒருவருக்கே ஒரு பதவி என்று பட்டா அளிக்கப்படவில்லை. ஐந்தாண்டுகள் தொடர்ந்து ஒரு பதவியில் இருந்தால் அவர் பதவி விலகி விடவேண்டும். அதன் பிறகு அந்தப் பதவிக்கு 3 ஆண்டுகள் அவர் ஆசைப்படக்கூடாது. 3 ஆண்டு கழித்து பழைய பதவிக்கு போட்டியிடலாம் என்று புதிய விதியையும் வகுத்துள்ளனர்.ஒரே பதவியில் ஒருவரே ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நீடிப்பது தடை செய்யப்படுகிறது.

கட்சி நிர்வாகிகளின் செயல்பாடு பற்றி மதிப்பீடு செய்யப்படும். இதற்காக ஒரு குழு அமைக்கப்படும். காங்கிரசை மீண்டும் இளைஞர்களின் இயக்கமாக மாற்ற புதிதாக இளைஞர்களை பெருமளவில் காங்கிரசில் சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# இந்தியை திணிக்காதீர்!



தமிழக கவர்னர் ரவிக்கும்,தமிழக அரசுக்கும் இடையே மோதல் நடந்து வரும் நிலையில், ஆளுநரும் அமைச்சர் ஒருவரம் மோதிக்கொண்டனர். கோவையில் உள்ள பாரதியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா வெள்ளிக்கிழமை நடந்தது. வேந்தர் என்ற முறையில் தமிழக கவர்னர் ஆர்.என். ரவியும், இணைவேந்தர் என்ற முறையில் உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடியும் கலந்து கொண்டனர். முன்னாள் இஸ்ரோ தலைவர் க.சிவன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர். விழாவில்

2, 000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே ஊட்டியில் துணைவேந்தர்கள் மாநாட்டினை இணை வேந்தரை அழைக்காமல் வேந்தர்(கவர்னர்) நடத்தியது சர்ச்சை ஆனது. எனவே தான் துணைவேந்தரை நியமிக்கும் கவர்னரின் அதிகாரத்தை பறிக்கும் மசோதாவை தமிழ்நாடு அரசு கொண்டு வந்து நிறைவேற்றியது. இதன் தொடர்ச்சியாக அந்த பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளின் முதல்வர்களை அழைத்து கவர்னர் கலந்தாலோசித்தார். இதற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளை அவர் அழைக்கவில்லை.உயர்கல்வித்துறையை கவர்னர் அடுத்தடுத்து சீண்டியநிலையில் பட்டமளிப்பு விழாவில் கவர்னரும் உயர்கல்வி அமைச்சரும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் முதலில் உரையாற்றிய தமிழ்நாடு உயர்கல்வி துறை அமைச்சர் க.பொன்முடி, "கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்றார் பாரதியார். பாரதியாரை அடிக்கடி கவர்னர் மேற்கோள் காட்டுவார். தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் உயர்கல்வியையும் ஆளுநர் புகழ்வார். உயர்கல்வியில் 53% மாணவர் சேர்க்கையுடன் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. இது தான் திராவிட மாடல். இஸ்ரோ

## கவர்னருடன் பொன்முடி மோதல்

# இந்திக்காரர்கள் ஏன் பானிபூரி விற்கிறார்கள்...

சிவன் மற்றும் நானுமே தமிழ் வழியில் தான் படித்தோம். தமிழ் மொழியில் படித்து தான் இந்திய அளவில் சிவன் உயர்ந்துள்ளார், நான் முனைவர் பட்டம் வரை பெற்று இன்று அமைச்சராக உள்ளேன். ஆளுநரே நாங்கள் எந்த மொழிக்கும் குறிப்பாக இந்தி மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல. மொழி கற்பது வாய்ப்பாக தான் இருக்க வேண்டுமே தவிர கட்டாயமாக இருக்கக்கூடாது. நாங்கள் இந்தியை எதிர்க்கவில்லை. இந்தி திணிப்பை தான் எதிர்க்கிறோம். ஆங்கிலம் சர்வதேச மொழி, தமிழ் உள்ளூர் மொழி. உலகத்தோடு உரையாட ஆங்கிலமும், எங்களுக்குள் உரையாட தமிழும் போதும் என்கிற போது இந்தி எதற்கு.

இரண்டு மொழிகள் போதுமானது. மூன்றாவது மொழி படிப்பது விருப்பமாக தான் இருக்க வேண்டும். அண்ணா மொழி கொள்கை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போது பூனைக்கு தனி வழி, எலிக்கு தனி வழி எதற்கு பூனை செல்கிற வழியிலே எலியும் செல்லலாம். உலகத்தோடு உரையாடும் ஆங்கிலத்திலே நாங்கள் மற்ற மாநிலங்களுடன் உரையாடலாம். இந்தி மொழி படித்தால் வேலை கிடைக்கும் என்கிறார்கள். ஆனால் நம் ஊரில் பானி பூரி விற்பவர்கள் இந்தி பேசுபவர்களாக தான் இருக்கிறார்கள்.

புதிய கல்வி கொள்கையில் உள்ள நல்ல அம்சங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். ஆனால் மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்நாட்டிற்கு என தனி கல்வி கொள்கையும் மொழி கொள்கையும் இருக்க வேண்டும்.

அதற்காக தான் தமிழ்நாடு மாநில கல்வி கொள்கையை வகுக்க குழு அமைத்துள்ளார் முதல்வர். மாநில அரசின் குரலாக இதை நான் இங்கு பதிவு செய்கிறேன். ஆளுநர் மாநிலத்தின் உணர்வுகளையும் மாணவர்களின் உணர்வுகளையும், புரிந்து கொள்வார் என நம்புகிறேன்.

தமிழ், ஆங்கிலம் தான் இங்கு கட்டாயம். இந்தி இங்கு கட்டாயம் இல்லை. மூன்றாவது மொழியாக மலையாளம், கன்னடம் என எது வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். அதற்கான வாய்ப்புகளை தான் நாம் உருவாக்கி தர வேண்டும். ஆனால் இந்த மொழியை தான் படிக்க வேண்டும் என திணிக்கக்கூடாது. கல்வியில் ஏற்ற தாழ்வு இருக்கக்கூடாது என்பதற்காக தான் அரசு பள்ளி மாணவர்களுக்கு பொறியியல் மற்றும் தொழில் படிப்புகளிலும் 7.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் உணர்வுகளை புரிந்து கொண்டுஆளுநர் எங்களுக்கு உதவுவார் என நம்புகிறேன். மாநிலத்தின் உணர்வுகளை ஒன்றிய அரசிடம் தெரிவிக்க வேண்டும்.' என்று வேண்டுகோள் வைத்தார்.

இதன்பின்னர் பேசிய கவர்னர் ரவி பதிலடி கொடுத்தார். சுதந்திரம் பெற்ற 70 ஆண்டுகளில் நம்முடைய வேற்றுமைகளை வித்தியாசங்களாக பார்க்கும் அணுகு முறைதான் இருந்து வந்தது. இந்தியாவை ஒன்றாகப் பார்க்காமல் பகுதி பகுதியாக பார்த்து வந்துள்ளோம். தற்போது துடிப்பான தலைமையின் கீழ் இந்த அணுகுமுறை மாறியுள்ளது. இந்தியாவில் சாதிகள் இருமடங்கு ஆகியுள்ளன. பல்வேறு சமூகங்கள் உருவாகியுள்ளன. இந்தியாவை ஒரே குடும்பமாக பார்க்க வேண்டும். தேசிய அளவில் அந்த பார்வை வந்துவிட்டது. இந்தியா 1947ல் உருவானது அல்ல. அரசியலமைப்பு சட்டமே இந்தியா அதாவது பாரதம் என்று தான் சொல்கிறது. பாரதம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே இருக்கிறது. மத்திய அரசு 'ஒரு பாரதம் உன்னத பாரதம்' 'தற்சார்பு பாரதம்' போன்ற திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. தமிழ்நாடு ஒரு முற்போக்கான மாநிலம். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை விடவும் தமிழ்நாடு பல துறைகளில் முன்னணயில் உள்ளது. இந்தியாவை

முன்னெடுத்து செல்வதில் தமிழ்நாடு தலைமை வகிக்க வேண்டும். மத்திய அரசு ஒரு மொழியை திணிப்பதாக ஒரு தோற்றம் உருவாக்கப்படுகிறது. ஆனால் அது உண்மைக்கு புறம்பானது. தேசிய கல்வி கொள்கை என்பது பள்ளி கல்வியிலிருந்து பட்டப்படிப்பு வரை பிராந்திய மொழிகளை ஊக்குவிக்கிறது.

சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தலைமை நீதிபதிகளின் மாநாட்டிலும் பிரதமர் மோடி உயர்நீதிமன்றங்களில் அந்த மாநில மொழிகளை பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார். பிராந்திய மொழி பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும். தமிழ் பழமையான, வளமான மொழி. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழியில் வளமான இலக்கியங்கள் உள்ளன.

மத்திய அரசு தொடர்ந்து தமிழை வளர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. உத்திரப்பிரதேசத்தில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கு இருக்கை உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல் மற்ற மாநிலங்களிலும் தமிழ் மொழிக்கு இருக்கைகளை உருவாக்க ஆலோசித்து வருகிறோம். பல மாநிலங்களும் இதற்கு இசைவு தெரிவித்து முன்வந்துள்ளன. மற்ற மாநிலங்கள் மட்டுமல்லாமல் தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் பிற நாடுகளிலும் தமிழ் மொழிக்கு இருக்கை அமைக்க முயற்சித்து வருகிறோம்.

மாநில அரசும் இதற்கு முன் வரவேண்டும். பிற மாநிலங்களில் தமிழை மூன்றாவது மொழியாக சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் தத்துவத்தின் வளமையை கொண்டு சேர்க்க வேண்டும்.எந்த ஒரு மொழியையும் குறிப்பாக இந்தி மொழியை திணிப்பது என்கிற பேச்சுக்கே இடமில்லை. அனைத்து மொழிகளிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மிகவும் பழமையான மொழி என்று விளக்கம் அளித்தார்.

பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் சூடாகப் பேச கவர்னர் அதற்கு சூடான பதிலடி கொடுத்தது அரசியல்மேடையாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

## பெண்களுக்கு பாதுகாப்பின்மையில் பா.ஜ., ஆளும் கர்நாடகம் 'டாப்'

இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பு இல்லாத மாநிலம் எது தெரியுமா? பா.ஜ., ஆளுகிற கர்நாடகம் தான். இதைச் சொன்னதே மத்திய அரசின் சுகாதாரத்துறை தான். குடும்ப வன்முறையில் பெண்கள் பாதிக்கப்படுவது கர்நாடகத்தில் தான் அதிகம். கடந்த 2019-21ம் ஆண்டுகளில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களுடன் தேசிய குடும்ப சுகாதார சர்வே மூலம் அந்த துறை அம்பலப்படுத்தி உள்ளது.26, 574 வீடுகளில் வசிக்கும் 30,455 பெண்கள் மற்றும் 4516 ஆண்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

திருமணமான பெண்களை ஆய்வு செய்ததில் 44 சதவீதம் பேர் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டதாக ஒப்புக் கொண்டனர். 2015ம் ஆண்டு இந்த பாதிப்பு 20.6 சதவீதமாக இருந்தது. இப்போது 24 சதவீதம் அதிகரித்துள்ளது.

கர்நாடகத்தில் 18-29 வயது பெண்களில் 11 சதவீதம் பேர் 18 வயதிற்குள் பாலியல் வன்முறையை அனுபவிக்க நேரிட்டது என்று கூறி ள்ளனர். கடந்த 12 மாதங்களில் வேலைக்கு போய் சம்பாத்தியம் செய்ததில் கையில் பணம் இருப்பதாக 37 சதவீத பெண்கள் கூறினர். 67.6 சதவீதம் வீடு அல்லது நிலம் வா ங்கியதாகவும் தெரிவித்தனர். 89 சதவீத பெண்கள் சேமிப்பு கணக்கு வைத்துள்ளனர். 61 சதவீத பெண்கள் சொந்தமாக செல்போன் வைத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

கொரோனா காலமாக ஊரடங்கு அறிவிக்கப்படுவதற்கு முன்பு நடத்தப்பட்ட ஆய்வாகும். அதன்பிறகு 2 ஆண்டுகள் இயல்புநிலை சரிவர திரும்பாத காரணத்தினால் இந்த பாதிப்பு அதிகமாக இருக்கலாம். இரண்டாவது இடத்தை பீகார் பிடித்துள்ளது. 40 சதவீத பெண்கள் குடும்ப வன்முறையை சந்தித்ததாக கூறி உள்ளனர்.

அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட ஆய்வில் குடும்ப வன்முறை என்பது குறைந்துள்ளது. 2015ல் குடும்ப வன்முறையால் பெண்கள் பாதிப்பு 31.2 சதவீதமாக இருந்தது.தற்போது 29 சதவீதமாக குறைந்துள்ளது.

# அடுத்த பிரதமர் அமித்ஷா!

## பா.ஐ.வில் ரகசிய காய் நகர்த்தப்படுகிறதா....?



இந்தியாவில் ஆளுகிற பா.ஜனதா கட்சியில் அத்வானி, முரளிமனோகர் ஜோஷி போன்ற மூத்த தலைவர்களை வயது மூப்பை காரணம் காட்டி புறந்தள்ளி விட்டு நரேந்திர மோடியை பிரதமராக கொண்டு வந்தனர். கடநத 2014 ம் ஆண்டு முதல் அவர் பிரதமராக இருக்கிறார். 75 வயதுக்காரர்களுக்கு பதவி கிடையாது. ஆனால் மோடிக்கு தற்போது 71வயதாகிறது.

மோடிக்கு அடுத்தபடியாக உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் குரல் தான் பா.ஜ.வில் எதிரொலிக்கிறது. இவர்கள் இருவரும் தான் ஆட்டிப்படைக்கிறார்கள். சில சமயங்களில் பிரதமரை விட அமித்ஷாவின் சொல்லுக்குத் தான் மதிப்பு அதிகமாகிறது. எனவே மோடியை பார்க்காமல் அமித்ஷாவை மட்டுமே பார்ப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். பா.ஜ.வில் அமித்ஷாவின் கை ஓங்கி இருப்பதையே இது காட்டுகிறது.

இந்தநிலையில் தான் அடுத்த பிரதமர் அமித்ஷா என்பதை வெளிப்படையாகவே சொல்லிவிட்டார் பா.ஜ. முதல்வர் ஒருவர். அசாம் முதல்வராக உள்ள ஹிமந்த பிஸ்வா சர்மா ஒரு பொது நிகழ்வில் பேசுகையில், அமித்ஷாவை பிரத மர் என்றே கூறினார். பிரதமர் அமித்ஷா அவர்களே... உள்துறை அமைச்சர் மோடி அவர்களே என்றே குறிப்பிட்டார். நூற்றுக்கணக்கானவர்கள் கூடி இருந்த நிகழ்வில் சர்மா இப்படி கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது. இது நாக்கு இடறல் என்று பா.ஜ. விளக்கம் அளித்தாலும், மனதில் இருப்பதையே சர்மா வெளிக்காட்டி விட்டார். பா.ஜ.வில் ரகசியமாக அப்படி ஒரு ஏற்பாடு நடக்கிறதோ என்று அசாம் காங்கிரஸ் சந்தேகத்தை கிளப்பி உள்ளது. அமித்ஷாவை பிரதமர் என்று சர்மா அழைத்தது திட்டமிட்ட செயல். சோனாவால் அசாம் முதல்வராக இருந்த போதே சர்மாவையே முதல்வர் என்று அசாம் எம்.பி. ஒருவர் அழைத்தது உண்டு. அப்போது சர்மா ஒரு அமைச்சர் தான். இப்போது அதேசர்மா முதல்வர் ஆக்கப்படவில்லையா? அதே போலத் தான் அடுத்த பிரதமர் அமித்ஷா என்பதையே சர்மா சூசகமாக குறிப்பிட்டு விட்டார். அப்படியானால் அமித்ஷாவை அடுத்த பிரதமராக பா.ஜ. முடிவு செய்து விட்டதா என்று அசாம் காங்கிரஸ் தனது முகநூல் பக்கத்தில் கூறிஉள்ளது.

மோடியை அகற்றி விட்டு அமித்ஷாவை பிரதமராக முன்னிறுத்தும் முயற்சிதான் இது. சர்மா கூறியதைப் பார்த்தால் நாக்கு இடறலாக தெரியவில்லை என்றும் காங்கிரஸ் விளக்கம் அளித்துள்ளது.

# ஒரே நாடு.. ஒரே கோஷம்... என்ன ஆனது?

ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு, ஒரே நாடு ஒரே ஆதார்கார்டு,ஒரே நாடு ஒரே பத்திரப்பதிவு, ஒரே நாடு ஒரே வாகனப்பதிவு,ஒரே நாடு ஒரே தேர்தல்....., இப்படிஎல்லாவற்றிலும் ஒரே நாடு.... ஒரே..... என்றே பா.ஜ. ஆட்சிக்கு வந்தது முதல் கோஷங்களை முன் வைத்தார்கள். படிப்படியாக ஒரே நாடு...ஒரே மொழி என்று இந்தியை திணிக்கப்பார்க்கிறார்கள். அதே போல ஒரே நாடு ஒரே மதம் என்ற முழக்கத்தையும் வைக்கிறார்கள். இந்தியா போன்ற பல மொழி பேசுகிறவர்கள், பல இனத்தவர்கள், மதத்தினர் மாமன்-மச்சான் உறவோடு வாழ்கிற பூமியில் இதெல்லாம் சாத்தியம் ஆகுமா?

ஒரே நாடு ஒரே ரேஷன் திட்டம் கடந்த 2018ம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் உள்ள ரேஷன் கடைகள் அனைத்தும், ஒரே கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. வேலைக்காக மாநிலம் விட்டு குடிபெயரும் தொழிலாளர்கள், அந்தந்த மாநிலங்களில் ரேஷன் கார்டை மாற்ற வேண்டாம். நாட்டின் எந்த பகுதியிலும் உள்ள ரேஷன் கடைகளில் இருந்தும் பொருட்கள் வாங்கும் வகையில் ஒரே நாடு ஒரே ரேஷன் திட்டம் அறிவிக்கப்பட்டது.எந்த மாநிலத்தில் வேலை பார்த்தாலும் பிற மாநில ரேஷன் கார்டை காட்டி, குடிபெயர்ந்த மாநிலத்தில் உள்ள ரேஷன் கடைகளில் பொருட்கள் வாங்கலாம். அதிமு ஆட்சியில் தமிழகத்திலும் பரீட்சார்த்தமாக சோதிக்கப்பட்டது.

இந்தியாவின் பல மாநிலங்களில் அறிவிக்கப்படாத உணவுப் பஞ்சம் நிலவுகிறது. இதனைத் தவிர்க்கும் விதமாக நாட்டில் பொதுவான உணவு வழங்கல் திட்டத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சிதான் இந்த ஒரே நாடு ஒரே ரேஷன். இதன்மூலம் அரசு கொள்முதல் செய்யும் விளைபொருட்களின் அளவு அதிகரிக்கும்.அதே சமயத்தில் பொருட்களின் போதாமை ஏற்படலாம். இதனால், உள்ளூர் பகுதி மக்களுக்கு பொருட்கள் கிடைக்காத நிலை உருவாகும். எந்திரக் கோளாறு அடிக்கடி நிகழலாம். அதனைக் காரணம் காட்டி உணவுப் பொருட்கள் வழங்குவதும் தடைபட்டதுண்டு.

ஒரே நாடு ஒரே ரேஷன்' திட்டத்தை 2021 ஜூலை 31ஆம் தேதிக்குள் அனைத்து மாநிலங்களும் அமல்படுத்தியிருக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ரேசன் பொருள்களை வழங்குவது குறித்து மாநில அரசுகள் திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டும் எனவும் புலம் பெயர் தொழிலாளர்களுக்கான உணவை உறுதிசெய்ய மாநிலங்கள் கேட்கும் கூடுதல் தானியங்களை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது. ஆனால் நாடு முழுவதும் இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறதா?

புலம்பெயர் தொழிலாளர்களை மையமாக கொண்டே இந்த திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது. உச்சநீதிமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது. இந்த திட்டம் தற்போது, 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப் பட்டுள்ளது. இந்த திட்டத்தில், 77 கோடி பயனாளிகள் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த திட்டம் வெற்றி அடைந்ததா? ரேஷன் கார்டை வெறும் பெயரளவுக்கு மட்டுமே வைத்துள்ள மாநிலங்களுக்கு வேண்டுமானால் இது சரியாகப்படலாம். ஆனால் தமிழ்நாடு போன்று முறையாக ரேஷன் திட்டத்தைச் செயல்படுத்துகிற மாநிலத்தில் அதை சிதைப்பதுதான் இந்த திட்டத்தின்

உள்நோக்கம். தமிழ்நாட்டில் ரேஷன் பொருட்கள் மாதத்தில் வேலை நாட்கள் அனைத்திலும் கிடைக்கின்றன. அப்படி இருக்கும் போது தமிழகம் போன்ற ரேஷன் கார்டு திட்டம் முறையாக அமல்படுத்தப்படும் மாநிலங்களில் ஒரே ரேஷன் திட்டத்தை செயல்படுத்துகிற போது, குறிப்பாக தமிழகத்தில் ரேஷனில் அரிசி இலவசமாக தரும் போது மற்றவர்கள் படையெடுக்கிற நிலை தான் உருவாகும். இப்போதே தமிழகத்தில் பிற மாநிலத்தவர் ஆதிக்கம் அதிகமாகி வருகிறது. டீக்கடை,ஓட்டல்கள், சலூன்கள், ஜவுளிக்கடைகள், துணிகள் தேய்ப்பவர்கள் என்று இந்தி பேசுகிறவர்களின் ஆதிக்கம் பெருகி விட்டது. கோவை மற்றும் திருப்பூர் நகரங்கள் வட இந்தியர்கள் அதிகம் வாழ்கிற பூமியாக மாறி வருகின்றன. கோவை வழியாக கேரளா செல்கிற ரயில்களில் கூட ஒரே இந்தி பாஷையைத்தான் கேட்க முடிகிறது. பா.ஜ., காலூன்ற முடியாத மாநிலங்களில் எல்லாம் வட இந்தியர்களை திணிக்கிற முயற்சி தான் இந்த ஒரே நாடு ஒரே ரேஷன்கார்டு திட்டமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

தற்போது ஒரே நாடு ஒரே சட்டம் என்று தான் உள்ளது. 1000 ரூபாய் லஞ்சம் வாங்குகிற கடைநிலை ஊழியர்கள் எல்லாம் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். வருவாய் மீறி சொத்துக்களை குவித்த அரசியல்வாதிகள் மட்டும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று காரணம் கா ட்டி விடுவிக்கப்படுகிறார்கள். சாமானிய ஊழியருக்கு பொருந்துகிற சட்டம், அந்த சட்டத்தை உருவாக்குகிற அவைகளில் அங்கம் வகிப்பவர்களுக்கு பொருந்தவே இல்லை. பணக்காரர்களும் சட்டத்தில் உள்ள ஓட்டைகள் வழியாக தப்பித்து விடுகிறார்கள். இப்படி ஒரே நாடு ஒரே ..... என்று எழுப்புகிற கோஷம் எல்லாம், இந்தியாவில் வெற்றி பெறாது. வளர்ந்த மாநிலங்களை குறிப்பாக தமிழகம் போன்ற தென் இந்திய மாநிலங்களை பின்னுக்கு தள்ளும் ஒரு யுக்தி தான் இது என்பது மட்டும் நிச்சயம்.

# டீசல் விலை உயர்வால் அரசு பஸ்களுக்கு மூடுவிழா



கேரளாவில் தனியார் பஸ்களுக்கு டீசல் விற்கும் விலையை விட அதிகமாக அரசு போக்குவரத்துக் கழகத்திடம் எண்ணெய் நிறுவனங்கள் வசூலிக்கின்றன.ஒரு லிட்டருக்கு 20 ரூபாய் கூடுதலாக பெறப்படுகிறது. இப்படி விலையில் பாரபட்சம் காட்டக்கூடாது என்றும் போதிய வசூல் இல்லாத வழித்தடங்களில் கூட பொதுமக்களின் நலன்களுக்காக அரசு பஸ்கள் இயக்கப்படுகின்றன.எனவே சந்தை விலைக்கே எங்களுக்கும் டீசல் விற்கவேண்டும் என்று எண்ணெய் நிறுவனங்கள் மீது கேரள அரசு போக்குவரத்துக் கழகம் வழக்கு தொடர்ந்தது. அரசு பஸ்களுக்கும் சந்தை விலைக்கே டீசல் தர வேண்டும் என்று ஐகோர்ட் உத்தரவிட்டது. இதைஎதிர்த்து எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கில் தனி நீதிபதிதீர்ப்புக்கு ஐகோர்ட் ஆயம் தடை விதித்தது. எனவே சுப்ரீம் கோர்ட்டில் கேரள அரசு போக்குவரத்து கழகம் முறையிட்டது. எண்ணெய் நிறுவனங்கள் சந்தை விலையை விட அதிகம் வசூலித்தால், நாங்கள் அரசு பஸ்களை இயக்க முடியாது. போக்குவரத்து கழகத்தை மூடவேண்டியது தான் என்று கேரள அரசு கூறி உள்ளது.

# இழந்த பதவி வேண்டுமா?

## பள்ளி கொண்ட ஈஸ்வரரை தரிசியுங்கள்....

செல்வம் செழிக்க வேண்டுமா... திருப்பதி ஏழுமலையானை சென்று தரிசியுங்கள்.. திருப்பம் ஏற்படும் என்பார்கள்.

நோய் தீர வேண்டுமா... இந்தந்த புண்ணிய தலங்களுக்கு போய் வாருங்கள் என்று ஆலோசனை கூறுவார்கள். நவக்கிரக தோஷங்கள் நீங்க இன்னின்ன கோயில்களை வல ம் வாருங்கள் என்பார்கள். அந்த வரிசையில் பதவி வேண்டுமா... இழந்த பதவியைப்பெற வேண்டுமா... இந்த கோயிலுக்கு போய் வாருங்கள் என்று சொல்லும் அளவுக் பெயர் பெற்றது சுருட்டப்பள்ளி பள்ளி கொண்டேஸ்வரர் ஆலயம்.

தமிழ்நாட்டின் எல்லையான ஊத்துக் கோட்டையை (திருவள்ளூர் மாவட்டம்) ஒட்டி அமைந்துள்ள சுருட்டப்பள்ளி கிராமத்தில் தான் பள்ளி கொண்டேஸ்வரர் எழுந்தருளி உள்ளார். திருமாலைப் போல பள்ளி கொண்ட நிலையில் சிவன் காட்சி தருகிறார்.

மூலவர் வால்மீகிஸ்வரர். இவருக்கு எதிரில் ராமலிங்கம் உள்ளது. இந்த சன்னதிக்கு வெளியே துவார பாலகருக்கு பதில் சங்கநிதியும், பதுமநிதியும் உள்ளனர். அம்மன் மரகதாம்பிகை சன்னதிக்கு வெளியில் துவார பாலகியருக்கு பதில் பாற்கடலிலிருந்து கிடைத்த காமதேனுவும், கற்பகவிருட்சமும் உள்ளனர். பிரகாரத்தில் விநாயர், முருகன், பிருகு முனிவர், பிரம்மா, விஷ்ணு, மார்க்கண்டேயர், நாரதர், சந்திரன், குபேரன், சூரியன், சப்தரிஷிகள், இந்திரன் வீற்றிருக்கிறார்கள். இந்த ஆலயத்தில் மூன்று மூலஸ்தானங்கள் உள்ளன. ஒன்று, வால்மீகேஸ்வரர் என்ற சுயம்பு லிங்க கருவறை. இந்த லிங்கம் வால்மீகி முனிவர் பூஜிப்பதற்காக உருவானது. அடுத்த கருவறையில் இருப்பது ராம சந்திரமூர்த்தி பிரதிஷ்டை செய்து பூஜித்த



லிங்கமான ராமலிங்கேஸ்வரர். மூன்றாவது, புடவையணிந்து, புன்னகை தவழ காட்சிதரும் மரகதாம்பிகையின் கருவறை.

## நந்தீஸ்வரர்

3 நிலை கொண்ட ராஜகோபுரத்தின் எதிரே, சுமார் 5 அடி உயர பீடத்தில் 5 அடி உயர நந்தீஸ்வரர் உள்ளார். இந்த கோவிலில் துவாரபாலகர்கள் கிடையாது. அதற்கு பதிலாக சங்கநிதி வசுந்தராவுடனும், பத்மநிதி வசுமதியுடனும் காட்சி தருகிறார்கள். உள்ளே சென்றால் நின்ற கோலத்தில் அன்னை மரகதாம்பிகை சிம்ம வாகினியாக காட்சி தருகிறார். கருவறைக்கு வெளியே அர்த்த மண்டபத்தில் வலது பக்கத்தில் கற்பக விருட்சம், இடது பக்கத்தில் காமதேனு பசு காணப்படுகிறது. நந்தீஸ்வரர் கைகூப்பிய நிலையில் அதிகார நந்தியாக அருள்கிறார். வெளியே ஒரு நந்திகேஸ்வரரும் உள்ளே எதிரும் புதிருமாக உள்ள இரு லிங்கங்களுக்கிடையே ஒரு நந்திகேஸ்வரருமாக இரு நந்திகளை இத்தலத்தில் தரிசிக்கலாம்.

## தல வரலாறு

துர்வாச மகரிஷியின் சாபத்தால் இந்திரலோக பதவியை இழந்தான் இந்திரன். அசுரர்கள் அவனது ராஜ்யத்தைப் பிடித்தனர். இழந்த பதவியை பெற வேண்டுமானால் பாற்கடலை கடைந்து, அமுதம் உண்டு பலம் பெற வேண்டும் என தேவகுரு பிரகஸ்பதி கூறினார்.

திருமாலின் உதவியுடன் வாசுகி என்ற பாம்பை கயிறாகவும், மந்திர மலையை மத்தாகவும் கொண்டு, தேவர்கள் ஒரு புறமும், அசுரர்கள் ஒரு புறமுமாக பாற்கடலை ஏகாதசி தினத்தில் கடைந்தனர். வாசுகி பாம்பு வலி தாங்காமல் விஷத்தை கக்கியது. தேவர்களும், அசுரர்களும் பயந்து இதிலிருந்து தங்களை காப்பாற்ற சிவனை வேண்டினர். சிவன் தன் நிழலில் தோன்றிய சுந்தரரை அனுப்பி அந்த விஷத்தை திரட்டி எடுத்து வர கூறினார். சுந்தரர் மொத்த விஷத்தையும் ஒரு நாவல் பழம் போல் திரட்டி சிவனிடம் தந்தார். அப்போது முப்பத்து முக்கோடி தேவர்களும், ""சிவபெருமானே! இந்த விஷத்தை வெளியில் வீசினால் அனைத்து ஜீவராசிகளும் அழியும். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து எங்களை காத்திடுங்கள் என மன்றாடினர்.

உடனே சிவன் "விஷாபகரண மூர்த்தி'யாகி அந்த கொடிய நஞ்சினை விழுங்கினார். இதைக்கண்டு பயந்த லோகமாதா பார்வதி, சிவனை தன் மடியில் கிடத்தி அவரது வாயிலிருந்த விஷம் கழுத்தினை விட்டு செல்லாதவாறு கைவைத்து அழுத்தினாள். இதனால் சிவனின் கழுத்தில் (கண்டத்தில்) நீலநிறத்தில் விஷம் தங்கியது. அதனால் அவர் "நீலகண்டன்' ஆனார். விஷத்தை தடுத்து அமுதம் கிடைக்கச் செய்ததால் அம்மன் "அமுதாம்பிகை' ஆனாள். பிறகு சிவன் பார்வதியுடன் கைலாயம் சென்றார். அப்படி செல்லும் வழியில் இத்தலத்தில் சற்று இளைப்பாறியதாக சிவபுராணமும், ஸ்கந்த புராணமும் கூறுகிறது. சிவன் பார்வதியின் மடியில் படுத்து ஓய்வெடுத்த இந்த அருட்காட்சியை சுருட்டப்பள்ளியில் பார்க்கலாம். இங்கு சுவாமி பள்ளி கொண்டதால், "பள்ளி கொண்டீஸ்வரர்' என அழைக்கப்படுகிறார். பரந்தாமனை போலவே பரமேஸ்வரன் பள்ளிகொண்ட ஒரே கோவில் இது என்பது சிறப்பாகும்.

இந்த திருக்கோயில் விஜயநகர பேரரசர் வித்யாரண்யரால் கட்டப்பட்டது. இங்குள்ள சிவபெருமான் மனித உருவில், ஆலகால விஷம் உண்டபின்னர், பார்வதி தேவியின் மடியில் தலை வைத்து படுத்தபடி ஓய்வெடுக்கும் உருவில் இருக்கிறார்.

. இந்த ஆலயத்தில் தான், முதன் முதலில் பிரதோஷ வழிபாடு நடத்தப்பட்டதாகவும், அதன்பிறகே மற்ற சிவ ஆலயங்களில் பிரதோஷ வழிபாடு தொடங்கியதாகவும் ஒரு நம்பிக்கை உள்ளது.இவ்வுலகை காப்பதற்காக அமிர்தத்தை கொடுத்து விட்டு விஷத்தை உண்ட இந்த பள்ளிகொண்ட நாதனை சனிக்கிழமைகளில் வரும் மகாபிரதோஷ தினத்தில் வழிபட்டால் இழந்த செல்வம் மீண்டும் கிடைக்கும். பதவி யிழந்தவர்கள் மீண்டும் அதே பதவியை அடைவர்,

பதவி உயர்வு கிடைக்கும், திருமணத்தடை விலகும், பிரிந்த தம்பதியினர் ஒன்று சேருவர் என்பது நம்பிக்கை.

வழிபடும் முறை

இத்தலத்தில் இருக்கும் அம்பிகையின் பெயர் மரகதாம்பிகை. முதலில் மரகதாம்பிகையை வழிபட்ட பின்னரே சிவனை வணங்க செல்ல வேண்டும். மரகதாம்பிகை சன்னதி அருகில் ராஜராஜேஸ்வரி, மகாலட்சுமி, சரஸ்வதி, அன்னபூரணி ஆகிய தேவிகளின் சிலைகள் உள்ளன. கையில் கிளியுடன் அழகிய வடிவில் ஞானதுர்க்கை காட்சிதருகிறார். வடக்கு பிரகாரத்தில் சுப்பிரமணியர் தனது இரு தேவியர்களுடன் தென்திசை நோக்கி நின்ற கோலத்தில் அருள்கிறார். ராஜயோகத்தை தரும் ராஜமாதங்கி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதற்கு கீழே ஒரு சுரங்கப்பாதை காணப்படுகிறது.பல கோவிலில் பலவிதமான தட்சிணாமூர்த்தியை தரிசிக்கலாம். ஆனால் இங்கு தட்சிணாமூர்த்தி தனது மனைவியுடன் காட்சி தருகிறார். இது வேறு எந்த கோவிலிலும் காணக்கிடைக்காத அற்புதம் ஆகும். இந்த தட்சிணாமூர்த்தியை வணங்கினால் ஞானம், கல்வி, குழந்தைபேறு, திருமண பாக்கியம், மாங்கல்ய பாக்கியம் கைகூடும் என்பது நம்பிக்கை

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றது இந்தத் திருத்தலம். இந்த கோவிலில் பள்ளிகொண்டீஸ்வரர் தனி சன்னிதியில் காட்சி தருகிறார். இந்த ஆலயத்தில் தான், முதன் முதலில் பிரதோஷ வழிபாடு நடத்தப்பட்டதாகவும், அதன்பிறகே மற்ற சிவ ஆலயங்களில் பிரதோஷ வழிபாடு தொடங்கியதாகவும் ஒரு நம்பிக்கை உள்ளது. பள்ளிகொண்டீஸ்வரரை சுற்றி பிருகு முனிவர், பிரம்மா, மகாவிஷ்ணு, மார்க்கண்டேயர், நாரதர், சந்திரன், குபேரன், சூரியன், அகத்தியர், புலஸ்தியர், கவுதமர், தும்புரர், வசிஷ்டர், விசுவாமித்திரர், வால்மீகி, தேவேந்திரனோடு விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகன்



ஆகியோரும் அருட்காட்சி புரிகிறார்கள்.அனைத்து தெய்வங்களும் தம்பதி சமேதராய் காட்சி தருகிறார்கள். பள்ளி கொண்ட ஈஸ்வரன் சர்வ மங்களாம்பிகை, வால்மீகிஸ்வரர் மரகதாம்பிகை, விநாயகர் சித்தி, புத்தி, சாஸ்தா பூரணை, புஷ்கலை, குபேரன் கவுரிதேவி, சங்கநிதி மற்றும் பதுமநிதி இப்படி அனைவரும் தத்தம் மனைவியருடன் உள்ளனர்.

இந்த கோவிலில் பிரதோஷ கால வழிபாடு பிரசித்தி பெற்றது. மேலும் திருவாதிரை, மகா சிவராத்திரி, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு வருடப் பிறப்பு நாட்கள், நவராத்திரி தினங்களில் இக்கோவிலில் சிறப்பு பூஜை நடக்கிறது. தினமும் காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் கோவில் நடை திறந்திருக்கும். சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து புத்தூர் வழியாக செல்லும் அனைத்து பஸ்களும் சுருட்டப்பள்ளியில் நின்று செல்லும்.

இந்த ஈசனிடம் பிரார்த்தனை செய்து நிறைவேறியவர்கள் பிரதோஷத்தன்று வில்வமாலையை ஈசனுக்கு சமர்ப்பித்து தமது நன்றியினைத் தெரிவிக்கின்றனர். இந்த கோயிலுக்கு அடிக்கடி சென்று இழந்த பதவியைப் பெற்றதில்ஓ.பன்னீர்செல்வம், தம்பித்துரை போன்ற அரசியல்வாதிகள் குறிப்பிடத்தக்கவர்கள்.

# தாஜ்மகாலுக்கு திடீர் சிக்கல்

உலகின் 7 அதிசயங்களில் ஒன்று ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள தாஜ் மகால். முகலாய மன்னன் ஷாஜகான் தனது மனைவிக்காக கட்டிய காதல் மாளிகை தான் தாஜ்மகால். இந்தியாவில் முகலாய மன்னர்களின் கட்டடக்கலைக்கு சான்றாக இந்த மாளிகை விளங்குகிறது. முற்றிலும் வெள்ளை சலவைக் கற்களால் உருவாக்கப்பட்டது. இறந்த மனைவி யின்நினைவாக கட்டிய வசந்த மாளிகை.1633ஆம் ஆண்டு தொடங்கி 1653 வரை சுமார் 1,000 ர் யானைகள், 40,000 பணியாளர்கள் உழைப்பில் இதை உருவாக்கினார் ஷாஜகான். இதன் வெளிப்புறக் கதவுகள் மற்று ம் சுவர்க ளில் பதிக்க இந்தியாவைத் தவிர ரஷியா, திபெத், பாரசீகம் என பல இடங்களில் இருந்தும் வைரம், வைடூரியம், முத்து , பவளம் என விதம் விதமாக வரவழைத்துத் அழகு பார்த்தவர் ஷாஜகான்.

இதைப் பார்க்க ஆண்டு தோறும் 20லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் 1983லேயே யுனெஸ்கோவால் கலாசார பிரிவின் கீழ் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டது. ஐ.நா.வின் கண்காணிப்பில் உள்ள பகுதி. இப்படிப்பட்ட பெருமை மிகு தாஜ்மகாலுக்கும் இப்போது சர்ச்சை கிளம்பி உள்ளது. இந்த தாஜ் மகாலை கட்டியது ஷாஜகான் என்றாலும், இதை கட்டிய நிலம் ஜெய்பூர் அரச குடும்பத்துக்கு உரியது. அதற்கான ஆதாரங்கள் இருக்கிறது. அந்த நிலங்களை ஷாஜகான் கைப்பற்றிக் கொண்டார். அதற்கு இழப்பீடு

## ஜெய்பூர் அரச குடும்பம் உரிமை கொண்டாடுகிறது

கொடுக்கப்பட்டதா? அப்படி கொடுக்கப் பட்டிருந்தால் எவ்வளவு? அதை மன்னர் குடும்பம் ஏற்றுக்கொண்டதா என்பதையும் கண்டறியவேண்டும். அப்போது நீதித்துறை எல்லாம் கிடையாது என்பதால் அப்போது வழக்கு தொடராமல் இருந்திருக்கலாம். ஆவணங்களைப் பார்த்தால் தான் உண்மை தெரியும் என்று பா.ஜ. எம்.பி. தியா குமாரி ஒரு பிரச்னையை உருவாக்கி விட்டார்.

தாஜ்மகாலின் வரலாறு பற்றி உண்மை கண்டறிய வேண்டும் என்று அலகாபாத் ஐகோர்ட்டில் தியா குமாரி எம்.பி. வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் தாஜ் மகாலில் உள்ள 22 அறைகளை திறக்கவேண்டும். அதில் என்ன தான் இருக்கிறது என்ற உண்மை தெரிய வேண்டும். இந்த நினைவுச்சின்னம் கட்டப்படும் முன்பு அந்த இடத்தில் என்ன இருந்தது என்பதை விசாரிக்க வேண்டும். அதை தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. இந்த இடம் தங்களுக்கு உரியதே என்பதற்கான ஆதாரங்கள் ஜெய்பூர் அரசகுடும்பத்திடம் உள்ளன. தேவைப்பட்டால் அதை தருவதற்கு தயாராக இருக்கிறோம். அந்த ஆவணங்களை நான் படித்து பார்க்கவில்லை. அதை படித்துப் பார்த்தால் தான் ஒரு முடிவுக்கு வர முடியும் என்றும் தியாகுமாரி கூறிஉள்ளார். அந்த அரச குடும்பத்தில் ஒருவர் தான் தியாகுமாரி என்பது குறிப்பிடத்தக்கது.



# கணினி திரையும்.. பார்வை பிரச்சினையும்..

அலுவலக பணியில் ஈடுபடுபவர்கள் தினமும் நீண்ட நேரம் கணினி திரை முன்பு அமர்வதை தவிர்க்கமுடியாது. வீட்டில் இருந்தபடியே அலுவலக பணி செய்யும்போது கணினி, லேப்டாப், செல்போன் என திரைகளில் செல விடும் நேரம் அதிகரிப்பதை கட்டுப் படுத்துவதும் சவாலானது. திரையின் முன்பு மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்கும்போது கண்கள் எதிர்கொள்ளும் சிரமத்தை தவிர்க்கும் வழிமுறைகள் வருமாறு:

**அமரும் விதம்:** கம்ப்யூட்டர் அமைந்திருக்கும் இடத்தை அடிக்கடி இடம் மாற்றிக்கொள்வது நல்லது. கணினியின் மானிட்டர் உங்கள் கண் மட்டத்திற்கு சற்று கீழே அமைந்திருக்க வேண்டும். மேலும் கணினியில் இருந்து முகம் 2028 அங்குல தூரத்திலோ அல்லது 40 முதல் 75 செ.மீ. தூரத்திலோ இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் கணினியில் தெரியும் எழுத்தை படிப்பதற்கு கழுத்தையோ, முதுகு பகுதியையோ முன்னோக்கி நீட்ட வேண்டிய அவசியமில்லாத நிலையில் அமர்ந்திருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். கணினி மேஜை, நாற்காலியின் உயரமும் சரியான அளவில் அமைந்திருக்க வேண்டும்.

**ஓய்வு:** தினமும் கணினி முன்னால் அமர்ந்திருப்பவர்கள் சிறிது நேரம் ஓய்வோ, இடைவேளையோ எடுத்துக்கொள்வதில் தவறில்லை. கண்களுக்கு சோர்வு ஏற்படுவதாக உணர்ந்தால் நிச்சயம் ஓய்வு எடுத்தாக வேண்டும். 202020 என்ற விதியை பின்பற்றி 20 நிமிடங்கள் வேலை பார்த்த பின்பு 20 அடி தூரத்தில் உள்ள ஒரு பொருளை 20 விநாடிகள் பார்க்க வேண்டும்.

**கண் சிமிட்டுதல்:** திரையில் கவனம் செலுத்தும்போது கண் சிமிட்டும் செயல்முறை தடைப்பட்டுவிடும். அதனை நினைவில் கொண்டு அடிக்கடி கண் சிமிட்ட வேண்டும். அது கண்களை ஈரப்பதமாக வைத்திருக்க துணை புரியும். கண்கள் உலர்வடையும் பிரச்சினையை தவிர்க்கவும் உதவும். கண்கள் உலர்ந்திருப்பதாக உணர்ந்தால் கண் டாக்டரிடம் ஆலோசனை பெற்று கண் சொட்டு மருந்தை உபயோக்கலாம்.

**கண் கூசுதல்:** கணினி இருக்கும் இடத்தில்



போதுமான அளவுக்கு வெளிச்சம் பரவி இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அப்படி விளக்கு வெளிச்சம் சீராக இருந்தால் கணினி திரையில் இருந்து வெளிப்படும் வெளிச்சத்தை குறைத்துக்கொள்ளலாம். கண் கூசும் அளவுக்கு கணினி திரையின் மீது விளக்கு வெளிச்சமோ, நிழலோ படக்கூடாது. கம்ப்யூட்டர் மானிட்டரில் கண்கள் கூசுவதை தடுக்கும் வடிப்பானை பொருத்திக்கொள்வதும் நல்லது. பணி செய்யும் இடத்தில் விளக்கு வெளிச்சம் எல்லா இடங்களிலும் சமமாக பரவி இருக்கவும் வேண்டும்.

**உடல் தோரணை:** நாற்காலியில் நேராக உட்காருதல், முதுகு பகுதியை பின்நோக்கி சாய்ந்த நிலையில் வைத்தபடியே கணினியில் வேலை செய்தல், தோள்பட்டை பகுதிக்கு அழுத்தம் கொடுக்காமல் இயல்பாக வைத்திருத்தல் என உடல் தோரணையை சீராக பேண வேண்டும். அப்படி செயல்படுவது கண்களுக்கு சிரமம் ஏற்படுவதை தடுக்க உதவும். இதன் மூலம் கம்ப்யூட்டர் விஷன் சிண்ட்ரோம் போன்ற கண் சார்ந்த பிரச்சினைகளில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும்.

கொரோனா தொற்று ஏற்படுத்திய தாக்கத்தால் வீட்டில் இருந்தபடியே அலுவலக வேலை, ஆன்லைன் வழியே கல்வி போன்ற நடைமுறைகள் இரண்டு ஆண்டு களாக நீடித்துக்கொண்டிருக்கின்றன. அதனால் கணினி, லேப்டாப், செல்போன் போன்ற மின்னணு திரை சாதனங்களுடன் செலவிடும் நேரம் அதிகரித்துவிட்டது. அப்படி நீண்ட

நேரம் மின்னணு திரையை பார்த்தபடி அமர்ந்திருப்பது கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

கம்ப்யூட்டர், லேப்டாப், டேப்லெட் அல்லது மொபைல்போன் முன்பு ஒவ்வொரு நாளும் நிறைய நேரத்தை செலவிடுகிறீர்கள் என்றால், 'கம்ப்யூட்டர் விஷன் சிண்ட்ரோம்' எனப்படும் கணினி பார்வை நோய்க்குறி (சி.வி.எஸ்) பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும். நீண்ட நேரம் திரையை பார்க்கும்போதும், டைப்பிங் செய்யும்போதும், ஆழ்ந்த கவனத்துடன் வேலை செய்யும்போதும் கண்களுக்கு கூடுதல் அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கும். அப்போது கண் கூசுதல், கண் எரிச்சல், சோர்வு போன்ற அறிகுறிகள் வெளிப்பட தொடங்கும்.

"கம்ப்யூட்டர் விஷன் சிண்ட்ரோம் பெரிய அளவில் கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் சரியான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கண்களுக்கு பாதிப்பு நேருவதை தவிர்க்கமுடியாது. திரையை பார்க்கும்போது கண்களுக்கும், கம்ப்யூட்டர் சாதனங்களுக்கும் இடையே போதுமான இடைவெளி இருப்பதை உறுதி செய்வது, அரை மணி நேரத்திற்கு ஒருமுறை திரையை பார்க்காமல் சில விநாடிகள் தவிர்ப்பது, ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் இடையே பதினைந்து நிமிடங்கள் இடைவெளி எடுப்பது போன்ற விஷயங்களை மேற்கொள்வது நல்லது" என்பது கண் மருத்துவர்களின் ஆலோசனையாக இருக்கிறது.

கணினிகள் கண் பார்வை திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பது நீண்ட காலமாக விவாதிக்கப்படும் கேள்வியாக இருக்கிறது. கணினி முன்பு அமர்ந்திருக்கும்போது கண்களின் கவனம் முழுவதும் திரை மீதுதான் படிந்திருக்கும்.

அப்படி நிலையாக கவனம் குவியும்போது திரையில் பார்க்கும், செயல்படுத்தும் விஷயங்கள் எல்லாம் மூளைக்கு தகவல்களாக பரிமாறப்பட்டுக்கொண்டே இருக்கும். இந்த செயல்முறைக்கு கண் தசைகளின் பங்களிப்பு அதிகம் தேவைப்படும். மேலும் கண்களின் கவனம் திரையில் படர்வதன் காரணமாக கண் சிமிட்டும் செயல்முறையும் குறைந்து போய்விடும். திரையில் அதிக ஒளி வெளிப்படும்போது கண்கள் கூசுதல், மங்கலான பார்வை போன்ற பாதிப்புகளும் உண்டாகக்கூடும்.

கம்ப்யூட்டர் விஷன் சிண்ட்ரோம் பாதிப்பு தீவிரமடைவதற்கு முன்பு சில அறிகுறிகளை வெளிப்படுத்தும். தலைவலி, கண்களில் அழுத்தம், கண் வறட்சி அடைதல், கண்களில் எரிச்சல், அரிப்பு ஏற்படுதல், கண்கள் சிவப்பு நிறத்திற்கு மாறுதல், கண் சோர்வு, இரட்டை பார்வை, கழுத்துவலி, முதுகுவலி போன்ற பிரச்சினைகள் உண்டாகும்.

# தாய்ப்பால் தருவது தாய்மார்களுக்கும் நல்லது

பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் தருவதே சிறந்தது. அதில் தான் நோய் எதிர்ப்பு சக்திகள் அதிகம் உள்ளன என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்தக் காலப்பெண்களில் சிலர் அழகு கெட்டு விடுமே என்று தாய்ப்பால் தருவதில்லை. சிலர் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையில், பிள்ளைகளை பாட்டியிடம் விட்டு விட்டு வெளிநாடு சென்று விடுகிறார்கள். இப்படிச் செய்கிற பெண்களுக்கு ஆபத்து காத்திருக்கிறது. அவர்களுக்கு மனரீதியான பிரச்னைகள் வரலாம் என்கிறார் அமெரிக்காவில் உள்ள மாசசூசெட்ஸ் சான் மருத்துவ பல்கலைக்கழக மகளிர் மருத்துவத்துறை வல்லுநர்கள் மேகன்யுன், ஒலிவியாஹால் ஆகியோர்.

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தருவதற்கும், மனரீதியான தொடர்பு உள்ளது. தாய்ப்பால் தருகிற பெண்களுக்கு மனநலம் முன்னேற்றம் அடையும். ஒரு பெண் தாய்ப்பால் தருவதன் மூலமே தாய்ப்பால் தருவதில் உள்ள சிக்கல்களை உணர முடியும். தாய்ப்பால் தராத பெண்கள் மன நீதியாக பாதிக்கப்படுவார்கள். இது தொடர்பாக தாய்ப்பால் தருகிற பெண்கள் மற்றும் தராத பெண்கள் என 36 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தாய்ப்பால் தந்த பெண்களுக்கு மன அழுத்தம் குறைந்து காணப்பட்டது. எனவே தாய்ப்பால் தருவது பெண்களின் மனநிலை ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது என்று மகளிர் மருத்துவ இதழில் கூறப்பட்டு உள்ளது.

# காண்டு மொத்தத்தையும் இறக்கிட்டாப்ல..


## கமலின் புதிய பாடலை விமர்சித்த கஸ்தூரி



இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'விக்ரம்'. இப்படத்தில் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன், அர்ஜுன் தாஸ், காளிதாஸ் ஜெயராம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தை கமல்ஹாசன் தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்கிறார். அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு கிரிஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

விக்ரம் திரைப்படம் வருகிற ஜூன் 3ம் தேதி வெளியாக உள்ளது. விக்ரம் திரைப்படத்தின் இசை மற்றும் டிரைலர் வருகிற மே 15ந்தேதி அன்று வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று இந்த திரைப்படத்தின் நடிகர் கமல்ஹாசன் எழுதி, கமல்ஹாசன் மற்றும் அனிருத் இணைந்து பாடியுள்ள 'பத்தல பத்தல' என்று தொடங்கும் பாடலின் பர்ஸ்ட் சிங்கிள் வெளியாகி வெளியானது. கமல் நடனமாடும் இந்த பாடலில் கமலின் குத்தாட்டம் ரசிகர்களை பெரும் அளவில் கவர்ந்து சமூக வலைத்தளத்தில் வைரலானது. மேலும் யூடியூப் டிரெண்டிங்கில் முதல் இடம் பிடித்தது.


இந்நிலையில் 'பத்தல பத்தல' பாடலில் இடம்பெற்றுள்ள சில வரிகள் சர்ச்சையையும் கிளப்பியுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள "ஒன்றியத்தின் தப்பாலே ஒன்னியும் இல்லே இப்பாலே" எனும் வரிகள் ஆளும் அரசை விமர்சிக்கும் வகையில் அமைந்து இருப்பதாகக் கூறி அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. இதனை விமர்சிக்கும் வகையில் நடிகை கஸ்தூரி அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில், சகலகலாவல்லவன்+மார்க்கண்டேயன் = கமல். வானதி அம்மையாரிடம் தோத்த காண்டு மொத்தத்தையும் லிரிக்ல இறக்கிட்டாப்ல. ஒன்றியம் ங்குற ஒத்தை வார்த்தையில தன் மொத்த அரசியலையும் சுருக்கிட்டாப்ல. கூட்டணி ஆட்சியில இல்லைனாலும் படக்காட்சியில வந்துருச்சு என்று பதிவிட்டு கமலை காட்டமாக விமர்சித்துள்ளார். இது சமூக வலைத்தளத்தில் பேசுபொருளாகி உள்ளது.



## வதந்தியால் எனக்கு திருமணம் நடக்கவில்லை

ஆண்களை அடிப்பேன் என்று பரவும் வதந்தியால் தனக்கு இதுவரை திருமணம் நடைபெறவில்லை என நடிகை கங்கனா ரனாவத் கவலை தெரிவித்துள்ளார். கங்கனா ரனாவத் ஆக்‌ஷன் நாயகியாக நடித்துள்ள தாகத் படம் வருகிற 20ம் தேதி வெளியாகிறது. நிகழ்ச்சி ஒன்றில் படம் குறித்து பேசிய போது, படத்தை போன்று நிஜத்திலும் நடந்துக்கொள்வீர்களா என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த கங்கனா, நிஜத்தில் யாரை என்னால் அடிக்க முடியும், "இதுபோன்ற வதந்திகளால் தான் தனக்கு திருமணம் ஆகவில்லை" என சிரித்தப்படி பதிலளித்தார்.






# ராம்சரணுடன் இணையும் கீர்த்தி சுரேஷ்

தெலுங்கில் கீர்த்தி சுரேஷிற்கு இப்போது அதிர்ஷ்ட காற்று வீசும் காலம். தற்போது மகேஷ் பாபுவுடன் சர்க்காரி வாரு பாட்டா நடித்து வெளியாக இருக்கிறது. இந்த நிலையில் ஷங்கர் இயக்கி வரும் ராம் சரணின் 15வது படத்தில் நாயகியாக கீர்த்தி சுரேஷ் நடிக்க உள்ளதாகத் தற்போது தகவல் வெளியாகி உள்ளது. இதனால் மகிழ்ச்சியில் இருக்கிறார் கீர்த்தி சுரேஷ். ஏற்கனவே சாணிக்கா யிதம் வெளியாகி ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

ஷங்கர் படத்தின் கதையும் லேசாக வெளிவந்திருக்கிறது. கார்த்திக் சுப்புராஜ் கதை எழுதி, தேர்தல் ஆணையத்தை மையமாக வைத்து உருவாகிவரும் இப்படம், ஆக்ஷன் பொலிடிக்கல் திரில்லர் பாணியில் எடுக்கப்பட்டு வருகிறதாம். ஷங்கர் ராம் சரண் கூட்டணியில் உருவாகும் இப்படத்தில் ராம்சரணுக்கு இரு கதாப்பாத்திரங்கள். அதில் ஒன்றில், கிராமத்து விவசாயியாக அவர் நடிக்கிறாராம். கதையில் இரு நாயகர்கள் இருப்பதால்தான் கியாரா அத்வானியுடன் கீர்த்தி சுரேசும் தற்போது சேர்ந்திருக்கிறார்.

# கேத்தரின் தெரசாவா இது?



2014ம் ஆண்டு ‘மெட்ராஸ்' படத்தில் கார்த்திக்கு ஜோடியாக நடித்து தமிழ் பட உலகுக்கு அறிமுகமானவர் கேத்தரின் தெரசா. ‘கதகளி', ‘கணிதன்', ‘கடம்பன்', ‘கதாநாயகன்', ‘கலகலப்பு2', ‘வந்தா ராஜாவா தான் வருவேன்', ‘நீயா2' போன்ற படங்களிலும் நடித்துள்ளார். ஏராளமான தெலுங்கு படங்களிலும், ஒரு சில கன்னட மலையாள படங்களிலும் நடித்து இருக்கிறார்.

2019ம் ஆண்டு ‘அருவம்' படத்துக்கு பிறகு அவர் தமிழில் படங்கள் நடிக்கவில்லை. ஓரிரு தெலுங்கு படங்களில் மட்டுமே நடித்தார். சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கேத்தரின் தெரசா பங்கேற்றார். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் பரவி வருகின்றன. இதனை பார்த்து ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கல்லூரி மாணவி போல கட்டுக்கோப்பான உடல்வாகு கொண்ட அவர், உடல் எடை கூடி குண்டாக மாறியிருந்ததே அதற்கு காரணம். அதேவேளை கேத்தரின் தெரசா, முன்பை விட இப்போது தான் மப்பும், மந்தாரமுமாக அழகாக இருப்பதாகவும் ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

# ஓடினார், ஓடினார்... ராஜபக்சே ஓடினார்

## பாவத்தின் தண்டனை ஆரம்பம்




இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் விண்ணை முட்டும் அளவுக்கு விலைவாசி உயர்ந்தது. மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமரின் வீட்டை மக்கள் எரித்தனர். கடந்த சில தினங்களாக நடந்த வன்முறை சம்பவங்களில் ஆளும் கட்சி எம்.பி., உள்ளிட்ட 8 பேர் கொல்லப்பட்டனர். 220க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 47 வாகனங்கள் மற்றும் 38 வீடுகளுக்கு தீவைக்கப்பட்டன. மகிந்த ராஜபக்சே, அவரது சகோதரர் கோத்தபயராஜபக்சே உள்ளிட்டவர்கள் தங்கள் இளமைக் காலத்தைக் கழித்த அவர்களது பூர்வீக வீடும் தீக்கிரை ஆக்கப்பட்டது. இலங்கையின் தெற்கு மாகாணத்தின் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள வீரகட்டிய எனும் கிராமத்தில் அந்த பூர்வீக வீடு உள்ளது. அரசு அருங்காட்சியகமாக செயல்பட்டு வந்த அந்த வீடு மே 9 ம் தேதி தீக்கிரையாக்கப்பட்டது. முற்றிலும் எரிந்து முடிந்த அந்த வீடு இப்போது சாம்பல் மண்டபமாக மட்டுமே எஞ்சி நிற்கிறது.

முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்சே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ மற்றும் குருநாகல் பிரதேச சபையின் தலைவர் அச்சல நிமந்த ஆகியோரின் வீடுகளில் மறைத்து வைக்கப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.ரசாயன உரங்கள், எரிவாயு சிலிண்டர்கள், டீசல் மற்றும் பருப்பு மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. இவர்களின் வீடுகளில் இருந்து 12.5 கிலோகிராம் எடையுள்ள 140 எரிவாயு சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளை மக்கள் சூறையாடி எரிவாயு சிலிண்டர்களை எடுத்துச் சென்றனர்.

அதே சமயத்தில் பிரதமரின் இல்லமும் தீவைக்கப்பட்டதால் ராணுவ பாதுகாப்புடன் ராஜபக்சே அலரி மாளிகையில் இருந்து குடும்பத்துடன் வெளியேற்றப்பட்டார். பின்னர் ஹெலிகாப்டரில் தப்பித்து ஓட்டம் பிடித்தார். அவர் எங்கே போனார் என்ற சர்ச்சை எழுந்துள்ளது. ராஜபக்சே கடற்படை தளத்தில் உள்ள பில்லோஹவுஸ் எனப்படும் காட்டு பங்களாவில் தங்கியிருப்பதாகவும், கடலுக்கு அருகில் உள்ளதாகவும்



கூறப்படுகிறது. அவரது பாதுகாப்பிற்காக முன்னாள் கடற்படை தள பணியாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர் கப்பலில் இந்தியா தப்பிச் சென்றதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டு உள்ளன. இதைத் தொடர்ந்து திரிகோணமலை கடற்படை முகாம் முன் பொதுமக்கள் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதே சமயத்தில் ராஜபக்சே மனைவி சிராந்தி ராசபக்சே , மகன் ரோஹி ஆகியோர் திருகோணமலை கடற்படை சோபர் தீவுக்குக் தப்பியோடிவிட்ட தாக தகவல் வெளியாகியுள்ளது. கொழும்பில் இருந்து ஹெலிகாப்டரில் தப்பிச்செல்ல ராணுவத்தினரே உதவி உள்ளனர். முன்னாள் அமைச்சர்கள் சிலரும் ராஜபக்சேவுடன் பதுங்கி இருப்பதாக தெரிகிறது. சில அரசியல்வாதிகள் குடும்பத்துடன் இந்தியா சென்றுள்ளதாக செய்திகள் பரவி உள்ளன. ஆனால் இதை இந்திய வெளிவிவகாரத்துறை மறுத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி கோத்தபயராஜபக்சே தனது டுவிட்டர் பதிவில், பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களை வெற்றிகொள்வதற்கு, அனைத்து இலங்கையர்களும் ஒன்றாக கைகோர்க்க வேண்டிய தருணம் இது. இன மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் உங்களைத் தள்ளும் நாசகார முயற்சிகளை நிராகரிக்குமாறு அனைத்து இலங்கையர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். நிதானம், சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வை ஊக்குவித்தல் இன்றியமையாதது என்று கூறி இருக்கிறார்.



இதற்கிடையில் இலங்கையில் அமைதியை நிலைநாட்ட முப்படையினர் களமிறக்கப்பட்டு உள்ளனர். வீதிகளில் தடை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அனாவசியமான முறையில் பொதுமக்கள் எவரும் வீதிகளில் நடமாட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டு உள்ளது. வன்முறைகளில் ஈடுபடுவோரை எந்தவொரு வழியிலும் கட்டுப்படுத்த போலீசாரும் முப்படையினரும் தயார் என்று இலங்கை ராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா.கூறி உள்ளார்.

## புதிய பிரதமர்

இலங்கையில் பொருளாதார தேக்கநிலையால். அதிபர் கோத்தபய ராஜபக்சே பதவி விலகக் கோரி மக்கள் போராடி வருகின்றனர். இதையடுத்து நாட்டு மக்களிடம் பேசிய கோத்தபய ராஜபக்சே, நாட்டு மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய பிரதமர் ஒருவர் மற்றும் அமைச்சரவையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன். ஒரு வாரத்தில் புதிய அரசு அமையும்.

அரசியலமைப்பின் 19வது திருத்தத்தை மீண்டும் அமல்படுத்துவேன். ஜனாதிபதி முறையை ரத்து செய்வது தொடர்பாக அனைத்து தரப்புகளுடன் பேசி முடிவு செய்வேன் என்று உறுதி அளித்துள்ளார். புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்கே நியமிக்கப்பட்டார். அவரும் உடனடியாக பதவி ஏற்றுக்கொண்டார். இலங்கை பிரதமராக அவர் 6வது முறை பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில் பொதுஜன பெரமுவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது. நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த உடனடியாக அமைச்சரவையை நியமித்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய பின்னரே சர்வதேச நாணய நிதியம் உட்பட உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து உதவிகளை

பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கூறப்படுகிறது.

அதே சமயத்தில் 10 கட்சிகளின் புதிய குழு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் இணையாது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். எனினும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றார்.

## பாவத்தின் தண்டனையே!

இலங்கையில் உயிருக்கு பயந்து ராஜபக்கே ஓடி ஒளிந்தது பாவத்தின் தண்டனையே என்று தமிழகத்தில் இருந்து குரல்கள் கிளம்பின. தே.மு.தி.க பொதுச் செயலாளர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு இனத்திற்காக போராடிய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இரக்கமற்ற முறையில் கொலை செய்து, அத்தனை மக்களையும் கொலை, கொள்ளை பலாத்காரம் செய்து மிக கொடூரமாக நடந்து கொண்ட ராஜபக்சேவிற்கு கிடைத்த மிகப்பெரிய தண்டனை. முன்பெல்லாம் பாவம் செய்தால் அதற்கான தண்டனையை பெற பல ஆண்டுகள் ஆகும். ஆனால் தற்போது பாவத்திற்கான தண்டனையை கண்ணெதிரிலேயே அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு செய்த கொடுமைகளுக்காகவும், அப்பாவி தமிழர்களை கொன்றதற்காகவும் ராஜபக்சே குடும்பத்திற்கு கிடைத்த தண்டனையாக தான் இதை பார்க்கப்படுகிறது. தமிழீழ மக்களின் சாபமே இது. வரவேற்கத்தக்கது. இன்றைக்கு தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அவருடன் இறந்த அனைத்து தமிழீழ மக்களின் ஆன்மா சாந்தி அடைந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.



கவிஞர் வைரமுத்து தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவு வருமாறு:

, நான்கு பக்கம் மரணம் சூழ்ந்தபோதும் 'தாயகம் பிரியேன் தாய்மண்ணில் மரிப்பேன்' என்ற பிரபாகரத் தமிழனின் பேராண்மை எங்கே... ஊர் கொந்தளித்த ஒரே மாதத்தில் நாடு கடக்கத் துடிக்கும் ராஜபக்ச எங்கே... ஓ சர்வதேச சமூகமே! இப்போதேனும் தமிழன் வீரத்திற்குத் தலைவணங்கு என பதிவிட்டுள்ளார்.

ராஜபக்சே வீடு எரிக்கப்படுவதற்கு பா.ஜ. முன்னாள் எம்.பி. சுப்பிரமணியன் சுவாமி கண்டனம் தெரிவித்துள்ளார். ராஜபக்சேவுடன் நெருக்கமான நட்பு வைத்துள்ள சுவாமி கூறுகையில், பிரதமர் ராஜபக்சே வீடு எரிக்கப்படுகின்றது என்றால் அதற்கு காரணமானவர்கள் இரக்கம் காண்பிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் அல்ல . எமது அயல்நாடு மற்றுமொரு லிபியாவாக மாறுவதற்கு அனுமதிக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

## தடை

இந்த நிலையில் முன்னாள் பிரதமர் ராஜபக்சே, அவரது மகன் நமல் ராஜபக்சே மற்றும் 13 எம்.பி.க்கள் வெளிநாடு செல்ல இலங்கை நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அரசுக்கு எதிரான போராட்டத்தின் போது மக்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே நாட்டை விட்டு தப்பிச் செல்லாமல் இருக்க பாஸ்போர்ட்களை கோர்ட்டில் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து யாரும் இந்தியாவுக்குதப்பி வந்து விடக்கூடாது என்பதால் இந்திய கடலோரப்படையின் காவல் பல ப்படுத்தப்பட்டுள்ளது.

# இந்துக்கள் சிறுபான்மையினரா?

## மத்திய அரசின் குழப்பநிலை

## சுப்ரீம் கோர்ட் சாடல்



வடகிழக்கு மாநிலங்களில் இந்துக்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதால் அவர்கள் சிறுபான்மையினராக அறிவிக்கவேண்டும் என்று கோரிய வழக்கில் மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டே இருப்பதற்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும், எல்லாவற்றையும் நீதிமன்றம் சொல்ல முடியாது" என நீதிபதிகள் காட்டமாக கூறினர்.

வடகிழக்கு பகுதிகள் உள்பட பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் இந்துக்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதாகவும் எனவே அந்த மாநிலங்களில் அவர்களை சிறுபான்மையினராக வகைப்படுத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு மீது ஏற்கனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருந்த மத்திய அரசு, இது விவகாரத்தில் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே முடிவு எடுத்து இந்துக்களை சிறுபான்மையினராக அறிவிக்கலாம் என கூறியிருந்தது. இதற்கிடையில் புதிய பிரமாண பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தது. இந்த விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டிய அதிகாரம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது.இது பற்றி விரிவாக விவாதிக்க வேண்டி உள்ளது என மாற்றி கூறியது.

இந்த வழக்கை திமன்ற நீதிபதி சஞ்சய் கிஷண் கவுல் தலைமையிலான அமர்வு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. அப்போது மத்திய அரசின் இந்த மாற்று நிலைப்பாட்டை நீதிபதிகள் கடுமையாக விமர்சித்தனர். நீதிமன்றத்தில் ஒரு விஷயத்தை தாக்கல் செய்வதற்கு முன்பாக பல ஆலோசனைகளை முன்வையுங்கள். ஏனென்றால் அனைத்தும் பொதுவெளிக்கு வந்துவிடும். இது தேவையில்லாத குழப்பங்களை ஏற்படுத்தும். இதுபோன்ற விஷயங்களில் அதிக கவனத்துடன் இருங்கள். உங்களின் மனமாற்ற அறிக்கைகள் ஏற்கத்தக்கதல்ல. ஒரு முடிவை மாற்றும் முன்பு பல முறை சிந்திக்கவேண்டும். எனவே மாநில அரசுகளுடன் கலந்து பேசி மத்திய அரசு ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்காக 3 மாதம் அவகாசம் அளிக்கப்படுகிறது. இதன் அடுத்த விசாரணை ஆகஸ்ட் 30ம் தேதி நடக்கும் என்று ஒத்தி வைத்தனர்.

மத்திய அரசின் வழக்கறிஞரிடம், மத்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அதை முடிவு செய்வதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது. முந்தைய மனுவுக்கு முற்றிலு ம் மாறாக புதிய மனு தாக்கல் செய்கிறீர்கள். பல்வேறு நிலைப்பாடுகளால் தெளிவான முடிவை காண முடியாது. நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று எல்லாவற்றையும் நீதிமன்றமே சொல்லிகொண்டிருக்க முடியாது. பிற சமூகத்தை விட எண்ணிக்கையில் குறைவாக உள்ள இந்துக்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து வழங்குவது தொடர்பாக மாநிலங்களுடன் கலந்தாலோசிக்க விரும்பினால், அவ்வாறு செய்ய வேண்டியதுதானே.. எதிர்காலத்தில் இது போன்ற சர்ச்சையான பிரச்னைகளில் முடிவு எடுக்க விரிவான விவாதம் தேவை என்றும் நீதிபதிகள் எடுத்துரைத்தனர். மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் முன்வைத்த இடித்துரைகள் ஒரு பின்னடைவாகவே கருதப்படுகிறது.

# தி.மு.க. தேர்தலில் கும்மாங்குத்து!

## கோவையில் அனல் பறக்கிறது

## புதிய வரவுகளும் மல்லுக்கட்டு

தமிழகத்தில் ஆளும்கட்சியாக உள்ள தி.மு.க.வில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உள்கட்சி தேர்தலில் கடும் போட்டி நிலவுகிறது. ஆளும்கட்சி என்பதால் பலரும் பணத்தை தண்ணீராக செலவழிக்கிறார்கள். குறிப்பாக மாற்றுக்கட்சிகளில் இருந்து வந்தவர்களுக்கு உடனடியாக போட்டியிட தகுதி இல்லை என்றாலும் விதி விலக்கு அளித்து நிற்க வைக்கிறார்கள். இதனால் பரம்பரை தி.மு.க.வினர் அதிருப்தி அடைந்துள்ளனர். இவ்வளவு நாள் கஷ்டப்பட்டது நாங்கள்... மாற்றுக்கட்சிகளில் இருந்து வந்தவர்களுக்கு வாய்ப்பு அளிப்பது நோகாமல் நொங்கு தின்கிற கதை தான் என்று பரம்பரை தி.மு.க.வினர் அங்கலாய்க்கிறார்கள்.

சட்டசபைத் தேர்தலில் படுதோல்வியைத் தந்த கொங்கு மண்டலம், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் கணிசமான வெற்றியை தி.மு.க.வுக்கு தந்துள்ளது. இதன் விளைவு உள்கட்சி தேர்தலில் போட்டி கடுமையாகி விட்டது. கோவை மாநகராட்சியை கைப்பற்றிய தி.மு.க. உள்கட்சி தேர்தலில் விசுவரூபம் எடுத்துள்ளது. கோடை வெயிலையும் பொருட்படுத்தாமல் கடுமையாக ஆள் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவை மாநகர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய செயலாளர் தேர்தலுக்கு கடும் போட்டி நிலவுகிறது.



போட்டியில் 4பேர் களத்தில் உள்ளனர். சி.எம். கிருஷ்ணகுமார். முன்னாள் பொதுக்குழு உறுப்பினர். பெரியநாயக்கன்பாளையம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர். இவர் மீது பெரிய விமர்சனங்கள் ஏதும் இல்லை என்பதால் மீண்டும் களத்தில் குதித்துள்ளார்.

ஆனைகட்டி மா.மதன்: இவர் தற்போது மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்.கடந்த ஊரக உள்ளாட்சி தேர்தலில் மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் பதவிக்கு கபோட்டியிட்டு தோல்வியடைந்தார் இவரது மனைவி திருமதி.சசி 24 வீரபாண்டி ஊராட்சி தலைவராக இருந்தவர் இவரும் இந்த போட்டியில் களம் காண்கிறார்.

வே.சூரியன் தம்பி: இவர் பாரம்பரிய திமுக குடும்ப பின்னணியை கொண்டவர். இவரது தந்தை மிசா.வேலுசாமி. எமர்ஜென்சி காலத்தில் மற்றும் சட்ட நகல் எரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்தவர். ஊராட்சி இளைஞரணி அமைப்பாளராகவும், பெரியநாயக்கன்பாளையம்.ஒன்றிய இளைஞர் அணியின் துணை அமைப்பாளராகவும், தடாகம் ஊராட்சியின் திமுக செயலாளராகவும் இருந்தவர். தற்போது கோவை மாநகர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளராக இருந்து வருகிறார். அந்த பகுதி இளைஞர்கள், பொதுமக்கள்,நிர்வாகிகள் மத்தியில் இவருக்கு அதிகம் செல்வாக்கு

MAARAN PRINTER, NO 5 RAJESHWARI NAGER, SELVAPURAM, COIMBATORE - 641026.
PUBLISHER: T. RAJHESHKUMAR , 45 -A SRI KRISHNA TOWERS, 2ND FLOOR, DR NANJAPPA ROAD, GANDHIPURAM, COIMBATORE, 641012









உள்ளது.ஒன்றிய செயலாளர் பதவிக்கான ரேஸில் இவரே முந்துகிறார்.

பி.எஸ். மருதாசலம். இவர் தி.மு.க.வுக்கு புதிய வரவு. 2 மாதங்களுக்கு முன்பு தான் ஆளும் கட்சிக்கு வந்தவர். இவருக்கும் ஒன்றியச் செயலாளர் மீது ஆசை வந்துள்ளது. இவரது மனைவி ரத்தினம் பன்னிமடை ஊராட்சித்தலைவர். இவரும் சமீபத்தில் தான் தி.மு.க.வில் சேர்ந்தவர். தி.மு.க.வுக்காக அந்த பகுதியில் மும்முரமாக செயல்பட்டு வருகிறார்.

தமிழக மின்சார துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கோவை பொறுப்பாளராக வந்த பின்னர் தி.மு.க.வின் வளர்ச்சி அபரிமிதமாக முன்னேற்றம் கொண்டுள்ளது. பெரியநாயக்கன் பாளையத்தை பொறுத் தவரை அ.தி.மு.க. செல்வாக்குடனே காணப்படுகிறது. இங்கு எளிதில் அணுகக்கூடிய,கொள்கையை மக்களிடத்தில் எடுத்துப் போகும் ஆளுமை கொண்டவர் ஒன்றிய செயலாளராக வர வேண்டும் என்பதே தி.மு.க.வினரின் கட்சியினரின் எதிர்பார்ப்பாக உள்ளது,இருந்தாலும் கட்சி தலைமை பார்வை எவர் மீது விழுகிறதோ அவரே ஒன்றிய செயலாளர் ஆக வாய்ப்புள்ளது பொறுத்திருந்து பார்ப்போம்.

பல் உடைப்பு

இதற்கிடையில் மாநிலம் முழுவதும் உள்கட்சி தேர்தல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சென்னை மாநகரில் ராயபுரத்தில் வட்டச் செயலாளர் பதவிக்கு மனு செய்த சலூன் சண்முகம் என்பவர் தாக்கப்பட்டார். இதனால் அவர் 4 பற்கள் உடைந்தன. முகத்தில் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அதே பகுதியில் வட்டச்செயலாளராக இருக்கும் ராஜா என்பவரே, என்னை எதிர்த்து மனுதாக்கல் செய்தாயா என்று கேட்டு தாக்கியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக காசிமேடு போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கிறார்கள்.

புதுக்கோட்டை

புதுக்கோட்டை நகர தி.மு.க. தேர்தல் ஆணையராக கே.எஸ்.ரவிச்சந்திரன் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் ஒருதலைபட்சமாக செயல்படுவதாக மண்டல பொறுப்பாளர்கள் கவனத்திற்கு அக்கட்சியினர் கொண்டு சென்றுள்ளனர். மேலும், முதலமைச்சரும் கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலினை நகரச் செயலாளர் நைனா முகமது, முன்னாள் நகரச் செயலாளரும், விவசாய தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளருமான அரு.வீரமணி, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சுப.சரவணன், நெசவாளர் அணி எம்.எம்.பாலு மற்றும் பலர் சந்தித்து புகார் மனுவும் கொடுத்துள்ளனர்.

தூத்துக்குடி

இதே போல தூத்துக்குடி மாவட்டத்திலும் சில பேரூர்களில் தி.மு.க. நிர்வாகிகள் தேர்தலில் குழப்பம் நீடிக்கிறது. பரம்பரை தி.மு.க.வினரை புறக்கணித்து விட்டு மாற்றுக்கட்சிகளில் இருந்து வந்தவர்களையே மா.செ. பரிந்துரைப்பதாக கட்சித்தலைமையிடம் புகார் அளித்துள்ளனர். முதல்வரை சந்தித்து தனக்கு எதிராக புகார் மனு அளித்ததாலேயே பழைய தி.மு.க.வினரை முன்னாள் செயலாளர் மறைந்த பெரியசாமியின் ஆதரவாளர்களை ஓரந்தள்ளி வருவதாகவும் அ.தி.மு.க.வில் இருந்து வந்தவர்களுக்கே மா.செ. அனிதா முக்கியத்துவம் அளிப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இதே போல நெல்லை மாநகர் மாவட்ட தி.மு.க.வில் மா.செ. ஆக உள்ள அப்துல்வகாப், குறிப்பிட்ட சமூகத்தினரை புறக்கணித்து வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இது பற்றியும் கட்சித்தலைமைக்கு புகார்கள் குவிந்துள்ளன.

ARASIYAL PANCHAYAT FORTNIGHTLY REGISTRAR OF NEWSPAPER FOR INDIA TNTAM/2015/65721

